# செம்பதாகை

மலர்: 6
இதழ்: 3
1984 - பங்குனி
விலை ரூபா 1-50
புரட்சிகர வெகுஜன ஏடு


# நாட்டின் சுதந்திரத்திற்கு ஆபத்து வந்துள்ளதா?

நமது நாட்டின் தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது என்றபேச்சை அரச தரப்பில் இருந்து பேசக் கேட்கின்றோம். அது உண்மையானல் அத்தகைய அச்சுறுத்தல் நிலை ஒன்றை உருவாக்கியதற்கான பொறுப்பை அரசாங்கமே முற்றுமுழுதாக ஏற்றுக் கொள்ள வேண்டும்.

இன்று தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து உருவாகியுள்ளதாகக் கூறும் அரசு அதற்கான பழியைத் தமிழ் மக்களின் தலைகளில் சுமத்திவிட முயலுகின்றது. அப்படிச் செய்வதன் மூலம் சிங்களமக்களின் ஏகோபித்த ஆதரவைப் பெற்று, அவர்களின் கவனத்தைத் திசைதிருப்பி, தனது தேச விரோத-மக்கள்விரோத ஆட்சியைத் தொடரவும்; தேசம் எதிர் நோக்கியுள்ள இனப் பிரச்சினையின் தீர்வைத் தட்டிக் கழித்து விடவும் அரசும் அதன் தலைவர்களும் எத்தனிக்கின்றனர்.

இப்பொழுது அரசு கிளப்பி விட்டுள்ள தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து என்ற கோஷம் உண்மைகளின் அடிப்படையில் உருவாக்கப்பட்டதா? அல்லது கடந்த காலத்தில் மக்களை ஏமாற்றப் பாவிக்கப்பட்டதான "தார்மீக சமுதாயம்", "தர் மிஸ்டம்", "அபிவிருத்தி", "நக்ஷலைட் ஆபத்து" போன்றவற்றின் கடைசித் துரும்பாகப் பாவிப்பதற்கு முன் வைக்கப்பட்ட ஒன்று என்ற நியாயமான சந்தேகமும் மக்கள் முன் ஏற்பட்டுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகளிடமும், அவர்களோடு ஒத்த மேற்கின் முதலாளித்துவ நாடுகளிடமும் நவகாலனித்துவ அடிப்படையில் நம் நாடு இதே அரசாங்கத்தினாலும் அதன் தலைவர்களாலும் கையளிக்கப்பட்டபோதே நமது தேசிய சுதந்திரமும் - தேசிய பொருளாதாரமும் விலைபேசப்பட்டது. மேலும் திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவிற்கு கையளிக்க முன் வந்தபோது நாட்டின் சுதந்திரம் அதன் உண்மையான ஆபத்தைத்தேடிக்கொண்டது

அணிசேராக் கொள்கையில் இருந்து விலகி, அமெரிக்க சார்பு நிலைக்கு நாட்டைத் தள்ளி, அவர்களின் ஆலோசனையுடன் அரசியல் அமைப்பை உருவாக்கி ஆட்சி நடத்தும் யூ. என். பியும் அதன் தலைவர்களும் ஏற்கனவே தேசிய சுதந்திரத்தை அமெரிக்காவிற்கு அடகுவைத்து விட்டார்கள். அதேபோல் உலகவங்கி, சர்வதேச நாணய சபை போன்றவற்றிக்காகவும் அந்நிய ஏகபோக நிறுவனங்களுக்காகவும் தேசிய பொருளாதாரம் சீர்குலைத்து சின்னாபின்னப் படுத்தப்பட்டுள்ளது.

இன்று இந்த உண்மைகளை மறைத்து விட்டு தமிழர்கள் சார்பாக இந்தியாவிடம் இருந்து மட்டுமே சுதந்திரத்திற்கு ஆபத்து ஏற்பட்டுள்ளது. எனக் காட்டப்படுகிறது இந்தியத்தலையீட்டுக்கான சாத்தியத்தைப்பற்றிநாம் ஏற்கனவே பல தடவைகளில் சுட்டிக்காட்டி வந்துள்ளோம். இப்படி ஒரு சூழ்நிலையை உருவாக்கிவளர்த்ததில் இந்த அரசிற்கு உரிய பங்களிப்பை எவரும் இலகுவில் மறுக்க முடியாது.

ஒரு புறத்தால் அமெரிக்க சார்பு நிலையை நாளாந்தம் வலுப்படுத்தி வருவதாலும், மறுபுறத்தால் தேசியப்பிரச்சனையாகி உள்ள இனப்பிரச்சினையின் தீர்வைத் தட்டிக் கழித்து வருவதாலுமே இந்தியத் தலையீட்டுக்கான சூழ்நிலை அதிகரித்து வருகின்றது என்ற உண்மையை அரசும் அதன் தலைவர்களும் மறைக்க முயலுகின்றனர். அதேவேளை தனியே தமிழ் மக்களையும், இந்தியாவையும் சிங்கள மக்கள் முன்காட்டி சுதந்திரத்திற்கு ஆபத்து விளைவிப்போர் என்று கூறி அந்தச் சூட்டில் அரசியல் குளிர்காய முற்படுகிறார்கள் யூ. என். பியினர்.

வாயு வேகத்தில் உயர்ந்து செல்லும் வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பையும், மோசமான பொருளாதார நெருக்கடிகளையும், அரசியல் அடக்குமுறைகளையும் மூடிமறைத்து நாட்டு மக்களை திசைதிருப்ப அரசிற்கு ஒரு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதுவே தேசிய சுதந்திரத்திற்கு ஆபத்து என்ற வடிவத்தில் கிடைத்துள்ளது என்றே கொள்ள வேண்டி உள்ளது.

இதற்கு மேலால் அத்தகைய ஒரு ஆபத்தை அரசு உண்மையாகவே உணர்ந்து கொள்வதானல் கீழ்வரும் விடயங்களைத் தாமதமின்றி செயல் படுத்த முன்வர வேண்டும்.

★ அரசு தான் நின்று நிரும் அமெரிக்க சார்பு கொள்பாட்டில் இருந்து முற்றுமுழுதாக விடுபட்டு உறுதியான அணிசேராக் கொள்கையில் கால் ஊன்றி நிற்கவேண்டும்.

★ திருகோணமலைத் துறைமுகத்தை அமெரிக்காவிற்கு கையளிக்கும் முடிவைக் கைவிட வேண்டும். அதே போல் திருகோணமலையை இந்தியா உட்பட வேறு எந்த அந்நிய நாட்டிற்கும் எக்காரணம் கொண்டும் கையளிக்க முற்படக் கூடாது.

★ இன்று தேசியப் பிரச்சனையாகிவிட்ட இனப்பிரச்சினையை ஒன்று அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட பிரதேச சுய ஆட்சியமைப்பின் அடிப்படையில் தீர்த்துவைக்க உரிய முயற்சிகளைக் கால தாமதம் இன்றி செய்தாகவேண்டும்.

இவற்றை நேர்மையாக அரசு செய்யத்தவறும் பட்சத்தில் ஏற்கனவே அமெரிக்காவால் உருவாகியுள்ளதும், எதிர்காலத்தில் இந்தியாவால் உருவாக்கப்படவுள்ள தேசிய சுதந்திரத்திரத்திற்கான ஆபத்தைத் தடுத்து நிறுத்துவது சாத்தியமற்ற ஒன்றாக இருக்கும் என்பதே எமது கருத்தாகும்.

## தோட்டத் தொழிலாளருக்கு இரண்டு ரூபா சம்பள உயர்வு

# பிச்சைப் பணமா?

தோட்டத் தொழிலாளர்களின் ஒன்றுபட்ட சம்பள உயர்வுப் போராட்டத்தை மூறியடிக்க அரசு பிச்சைப் பணமாக இரண்டு ரூபா சம்பள உயர்வை கொடுப்பதாக கூறியுள்ளது. இதை ஒரு சம்பள உயர்வு என யூ. என். பி தொழிற் சங்கம் ஏற்றுக் கொண்டு வேலை நிறுத்தப் போராட்டத்தில் இருந்து விலகி நிற்கப் போகிறதாம். ஆட்சியின் அடிமைகளாக செயல்பட்டு ஆலவட்டம் பிடிக்கும் அத்தகைய தொழிற் சங்கத் தலைமையால் வேறு எதைத்தான் செய்யமுடியும்.

இன்று பிச்சை கொடுப்போர் கூட ஐம்பது சதம் ஒரு ரூபாவிற்குக் குறையக் கொடுப்பதில்லை. ஏனெனில் யூ.என்.பியின் பொருளாதார வளர்ச்சி லட்சணத்தில் ஒரு ரூபாவிற்கு வாங்கக்கூடிய உணவுப் பொருள் ஒன்று இரண்டே உள்ளன. அப்படி இருக்க இரண்டு ரூபா சம்பள உயர்வு தோட்டத்தொழிலாளிக்கு எம்மட்டிற்கு. ஏற்கனவே வழங்கப்பட்ட சம்பள உயர்வுகளைக் கூட கொடுக்க மறுப்பவர்கள் இப்பொழுது பிச்சைச் சம்பள உயர்வைப் பேசுகிறார்களா? கோடி கோடியாக அந்நியச் செலாவணி சேர்க்கும் தொழிலாளர்களுக்கு இரண்டு ரூபா மட்டும் தானு சம்பள உயர்வு.

வேறு வழிஏதும் இல்லை. எட்டப்பர் வேலை செய்யும் தொழிற்சங்கங்களை தோட்டத் தொழிலாளர்கள் உதைத்துத் தள்ளி விட்டு தமது சம்பள உயர்வுப் போராட்டத்தை முன்னெடுக்க வேண்டும். தொழிலாளர்களின் மீது உண்மையான அக்கறை உள்ள நேர்மையான தொழிற் சங்கங்கள் இப் போராட்டத்திற்கு வழிகாட்டும் என்றே நம்புகின்றோம்.

## பந்தோபஸ்து அமைச்சருக்கு ஒரு வேண்டுகோள்!

தேசிய பந்தோபஸ்து அமைச்சராக சிரேஷ்ட அமைச்சர்களில் ஒருவரான லலித் அத்துலத்முதலி நியமிக்கப்பட்டுள்ளார். அவரது பணி வடக்கு கிழக்கில் நிலவி வரும் பயங்கரவாதம் என்ற ழைக்கப்படும் தீவிரவாதத்தை இல்லாமல் ஒழிப்பதாகும் என விளக்கம் கூறப்பட்டுள்ளது.

பயங்கரவாதம் அல்லது தீவிரவாதம் என்று கூறப்படும் விஷயங்கள் எந்த அரசியல், பொருளாதாரச் சூழலகளில் தோற்றம் பெற்றது என்பதை ஆராயாமல், அல்லது, இன்று தமிழ் மக்களுக்கு திருப்தி அளிக்கக் கூடிய இனப் பிரச்சனையின் தீர்வை விரைவாக நடைமுறைக்கு கொண்டு வரவேண்டும் என்பதை அக்கறைப் படுத்தாமல் தீவிர வாதத்தை ஒழிக்கவென அரசு புதிய அமைச்சை உருவாக்கி உள்ளது.

இத்தகைய நடவடிக்கை எவ்வளவு தூரத்துத்திற்கு தன் இலக்கை அடைவதில் வெற்றிபெறப் போகிறது என்பது கஷ்டமான தொன்றேயாகும். இவ்வேளை தேசிய பந்தோபஸ்து அமைச்சருக்கு ஒரு ஆலோசனையையும் வேண்டுகோளையும் விடுக்கவிரும்புகின்றோம். அதாவது தீவிரவாதம், பயங்கரவாதம் என்பனவற்றை எதிர்ப்பதாக அல்லது ஒழிப்பதாகக் கூறிக் கொண்டு ஒன்றுமறியாத தமிழ்மக்களை தீவைப்பினுலும் கொலை, கொள்ளைகள்போன்ற வன் செயல்களினுலும் வதை செய்தது போன்ற ஒரு நிலையை மீண்டும் நடைமுறைக்குக் கொண்டுவர வேண்டாம் என்பதே அவ் வேண்டுகோளாகும். இப்புதிய அமைச்சின் உருவாக்கத்திற்கு சிலநாட்கள் முன்பாகவே சுன்னாகத்தில் கடைகளுக்கு தீவைத்து முன்னைய நடைமுறை செயல்படுத்தப் பட்டது. அதேபோல் கொழும்பில் பீதியை ஏற்படுத்தும் வதந்திகள் பரப்பப்பட்டன.

எனவே தேசிய பந்தோபஸ்து அமைச்சரின் பிரதான கடமை ஒன்றுமறியாத வடக்கு-கிழக்கு மக்களின் உயிர்களையும் உடமைகளையும் பாதுகாக்க வேண்டும் என்பதாகும்.

## தீர்வு என்ன?

| | |
|---|---|
| ★ மாவட்ட சபைக்கு மேலான எந்தவொரு அமைப்பினையும் வழங்க மாட்டோம். | ★ மாநில சபைகளுக்கு குறைந்த எந்தவொரு அமைப்பையும் ஏற்றுக் கொள்ளமாட்டோம் |
| பிரதமர் பிரேமதாசா | அ. அமிர்தலிங்கம் |

சர்வகட்சி மாநாடு மே 9ம் திகதி மீண்டும் கூடுமாம்!

# சம்பவங்களும் அதன் போக்குகளும்

சமஞானி

# இயற்கை அழிவுகளும் செயற்கை அல்லல்களும்

நாட்டு மக்கள் அனைவரும் இன்று பொருளாதார நெருக்கடிகளினால் புழுவாகத் துடிக்கிறார்கள். அரிசி விலை தொட்டு மா விலை வரை, தேங்காய் தட்டுப்பாட்டில் இருந்து சம்பள உயர்வு கிடையாமைவரை சகல சாதாரண மக்களும் விக்கி விசும்புகிறார்கள். இவ்வேளை குறிப்பாக வடக்கு கிழக்கு மாகாணமக்கள் மேற்கூறியவற்றுடன் மேலதிகமான பல பிரச்சனைகளையும் எதிர் நோக்கியுள்ளனர். அதில் ஒன்று இயற்கை அழிவு ஏற்படுத்திய மோசமான சேதமாகும். அண்மையில் ஏற்பட்ட பெருவெள்ளமும் அதற்கு சில வருடங்கள் முன்பாக இடம்பெற்ற சூறாவளியும் லட்சக்கணக்கான மக்களையும் பலகோடி ரூபா பெறுமதியான பொருட்களையும், விவசாய விளைச்சல்களையும், வீடுவாசல்களையும் நாசமாக்கி விட்டன. மக்கள் என்றுமில்லா இயற்கை அழிவுச் சேதங்களினால் பாதிக்கப்பட்டனர். நிவாரணம் என்று கூறப்பட்டவை எல்லாம் வெறும் பேச்சுக்களே. அன்றைய ஜனாதிபதி நிதி தொட்டு இன்றைய வெள்ள நிவாரண நிதி வரை எத்தனை கோடி ரூபாக்கள் சேர்க்கப்பட்டன? எவ்வளவு பொருள் உதவிகள் அன்பளிப்பாக வழங்கப்பட்டன? இன்றும் பல வெளிநாடுகள் அள்ளிக்கொடுத்த வண்ணமே இருக்கின்றன, அரசு பெயருக்கு மட்டும் கிள்ளித் தெளித்ததே தவிர மக்களின் நிலையோ பரிதாபம். பாதிக்கப்பட்ட மக்களுக்கு ஐம்பது, எழுபத்தைந்து ரூபா எம்மட்டிற்கு? அதைக்கூடத் தட்டிப் பறித்து விடும் எட்டர் கூட்டத்தின் தில்லுமுல்லுகள் தான் எத்தனை? உயர் அதிகாரிகள் தொட்டு உள்ளூர் அலுவலர் வரை இந்த நிவாரணப்பணத்தில் ஏப்பம் இட்டதுதான் எவ்வளவு? எவ்வளவோ கஷ்டங்களின் மத்தியிலும் மக்களுக்கு நேர்மையாக சேவை செய்த அதிகாரிகளும் அலுவலர்களும் இல்லாமல் இல்லை. அவர்களது நேர்மையான சேவைகளைக் கூடத் தட்டிப் பறித்து தம் வயிறு வளர்க்கும் கூட்டம் களங்கப்படுத்தவே செய்தது. இதுதான் கேடுகெட்ட முதலாளித்துவ சமுதாயத்தின் தாற்பரியம்.

வடக்கு கிழக்கு மக்களை நாளாந்தம் அச்சுறுத்தி வரும் அடுத்த பிரச்சினை தான் கொலைகளும் கொள்ளைகளும். குறிப்பாக இப்பிரதேசங்களின் மக்களின் உயிருக்கும் உடைமைகளுக்கும் இன்று உத்தரவாதம் அளிக்கக் கூடியவர் எவரும் இல்லை. அரசுதான் பின் பற்றிய கொள்கைகளினால் செயலிழந்து காணப்படுகிறது. அம் மக்களின் சாதாரண நம்பிக்கையைக் கூட இழந்து விட்டது. மக்கள் இரவுபகலாக குடல் நடுக்கத்துடன் வாழும் நிலை தோற்றுவிக்கப்பட்டுள்ளது. வழிப்பறி தொடக்கம் வங்கிக் கொள்ளைவரை ஒரு சமுதாய நடைமுறையாகி வருகிறது. கேவலம் மிக்க சிக்காக்கோ நகரப் பாணியில் கொலைகளும் கொள்ளைகளும் இங்கு இடம்பெற ஆரம்பித்து விட்டன. இங்கு ஒரு வித்தியாசம் காணப்படுகிறது. கொள்ளை கொலையின்போது "இயக்கம்" என்ற சொற்றொடர் பாவிக்கப்படுவது தான். இதுவரை காலமும் இயக்கம், விடுதலை, இலட்சியம் என்ற சொற்றொடர்கள் மக்களின் விமோசனத்திற்கும் அவர்களது நல்வாழ்வுக்கு மானவையாகவே பயன்படுத்தப்பட்டு வந்தன. இன்றோ அவை வழிப்பறிக் கொள்ளையர்களின் வசதிக்கான ஒன்றாக மாற்றப்பட்டு விட்டது. கப்பம் கேட்டு மிரட்டுவதும், கையில் அகப்பட்டதைச் சுருட்டுவதும் இயக்கத்தின் பெயரால் இடம்பெறும்போது மக்கள் செய்வதறியாது திகைத்து நிற்கின்றனர். யார் இயக்கம் யார் இயக்கமற்றவர்கள் என்பதை இலம்காண முடியாது மக்கள் திண்டாடுகின்றனர். ஏனெனில் எல்லோரும் துப்பாக்கி வைத்திருக்கின்றனர். சும்மாவல்ல சுட்டுக் கொலையும் செய்கின்றனர். இந் நிலை தொடர்ந்தால் நிலைமை என்னாவது? யார் மிஞ்சுவது? "தண்டனைகள்" வழங்கப்படுகின்றன. அதற்குச் சவால்விடுத்து கொள்ளைகளும் கொலைகளும் தொடருகின்றன. ஆரம்பமே தவறு அதன் உச்சகட்டமும் தவறாகவே உள்ளது. மக்கள் தீர்ப்பு வழங்க அதிகநாட்கள் செல்லாது. "கம்பத்தில் ஏறி எப்படிக் கரணம் அடித்தாலும் காசுவாங்க கீழேதான் வரவேண்டும்" என்பது ஒரு போதும் பொய்யாகாது. மக்கள் சோதனைக்குமேல் சோதனைக்குட்பட்டாலும் தமது இறுதியான தீர்ப்பை நியாயமாகவே வழங்குவர். அப்பொழுது கொள்ளையர்களும் கொலைகாரர்களும் உரிய தண்டனையைப்பெற்றே தீருவார்கள்.

★

## பாதிக்கப்படாத ஆசிரியரும் இடமாற்றம் கோருவதா?

நம் நாட்டில் ஆசிரியத் தொழில் ஏனைய தொழில்களைவிட வாய்ப்பான ஒரு தொழிலாகக் கருதப்படுகிறது. இது சம்பள அடிப்படையில் அல்ல. அத் தொழிலில் கிடைக்கும் அதிகளவு லீவும், ஓய்வும் தான் காரணம். இதனால் அத்தொழிலில் உள்ளவர்களிடம் தொழில் கிடைத்த ஓரிரு வருடங்களில் இடமாற்றம் என்ற நோயும் இலகுவாகத் தொற்றிக் கொள்கிறது. இதற்கு லீவு, ஓய்வு மட்டுமன்றி அவர்களது சம்பளம், தங்கும் வசதியின்மை, பிரயாணக் கஷ்டம், குடும்பங்களைப் பிரிந்து வாழும் நிலைகளும் காரணங்களாகும். இருந்தாலும் ஆசிரியர்களிடம் காணப்படும் ஒருவித இயல்பு என்னவெனில் யாரைப்பிடித்தாகிலும் ஊரோடு, கிட்டவுள்ள பாடசாலைக்கு இடமாற்றம் பெற்றுவிடவேண்டும் என்பது தான். இதற்கு விதிவிலக்கான ஆசிரியர்களும் பலர் இருக்கிறார்கள் என்பதும் உண்மையே.

கடந்த யூலை மாத இனவாத சம்பவங்கள் வெளி மாகாணங்களில் கடமையாற்றிய ஆசிரியர்களைப் பாதித்து விட்டது. இதில் மோசமாகப் பாதிப்படைந்தவர்களுக்கு இடமாற்றம் அவசியமானதேயாகும். அதேபோல் தொடர்ந்தும் பாதுகாப்பாக தமது கடமைகளைச் செய்ய முடியாத நிலையிலும் சில ஆசிரியர்கள் உள்ளனர். அத்தகையவர்களுக்கும் இடமாற்றம் தேவையான ஒன்றுதான். இதற்குமேலால் சாட்டோடு சாட்டாக வெளிமாகாண ஆசிரியர்கள் எவ்லோரும் இடமாற்றத்தை எதிர்பார்ப்பது சரியானதொன்றல்ல. ஏனெனில் வெளி மாகாணங்களில் இவ் ஆசிரியர்கள் கல்விகற்பித்துக்கொடுத்தது தமிழ் மாணவர்களுக்கே என்பதையே முதன்மைப்படுத்த வேண்டும்.

இன்று தமிழ் மக்கள் வெளிமாகாணங்களில் மட்டுமன்றி சொந்த ஊர்களிலும் பாதுகாப்பு இன்றியே வாழ்ந்து வருகிறார்கள். ஒவ்வொரு ஆசிரியனும் பாதுகாப்பு இல்லை எனக் கூறி வெளிமாகாணங்களில் வேலை செய்ய மறுத்தால் அதனால் பாதிக்கப்படுவது தமிழ்மாணவர்கள் தான் என்பதனைப் புரியவேண்டும். சிலருக்கு அவ்வாறு பாதிக்கப்படுபவர்கள் இந்திய வம்சாவழி மக்களாக, மூஸ்லீம் மக்களாகத் தென்படக்கூடும், ஆனால் அவர்கள் எல்லோரையும் சேர்த்தே 'முப்பத்தைந்து லட்சம் தமிழர்களுக்கு' என்ற அரசியல் கோஷம் கடந்த காலத்தில் கிளப்பப்பட்டது என்பதை ஆசிரியர்களுக்கு அதிகம் நினைவூட்டத் தேவை இல்லை. ஏனெனில் அநேக ஆசிரியர்கள் அக்கோஷத்தை பிரசாரம்செய்வதில் முன்மரமாக நின்றவர்கள் அல்லவா?

ஆதலால் எனக்கு ஒரு நியாயம் ஏனையவர்களுக்கு வேறொரு நியாயம் என்ற நிலைக்கு யாரும் போகக் கூடாது. சொந்தப்பாதுகாப்பு ஆசிரியர்களுக்கு அவசியம் ஆனால் அந்தச் சாட்டில் வெளிமாகாணத் தமிழ் பாடசாலைகளுக்கு மூடு விழா வைக்க முயலும் ஒரு இனவாத அரசின் நடவடிக்கைகளுக்கு தமிழ் ஆசிரியர்கள் துணை போகக்கூடாது.

★

## வடபகுதி புகையிரத சேவை பலியிடப்படுவது யாருக்கு?

யாழ்ப்பாணத்தில் கடந்த வருடம் இடப்பெற்ற புகையிரத எரிப்புச் சம்பவத்துடன் நிறுத்தப்பட்ட வடபகுதிக்கான புகையிரதச் சேவை முழுமையாக மீண்டும் ஆரம்பிக்கப்படவில்லை. நாட்டு நிலைமைகள் வழமைக்குத் திரும்பி பிரயாணம் செய்வோரின் தொகையும் அதிகரித்து விட்டது. ஆனால் ஒரு நாளைக்கு ஒரு புகையிரதம் மட்டுமே யாழ்ப்பாணம் வந்து செல்கிறது. அதில் நகரங்களுக்கிடையிலான புகையிரத சேவைக்கு அதிக பணம் கொடுத்து மூற்கூட்டியே பதிவும் செய்யவேண்டியுள்ளது. ஒரு நாளைக்கு யாழ்ப்பாணத்தில் இருந்து மூன்று புகையிரத சேவையும் கொழும்பில் இருந்து மூன்று சேவையும் நடத்தப்பட்டது, அந் நேரத்தில் கூட புகையிரதங்களில் அதிக நெருக்கடி காணப்பட்டது. இன்று ஒரு சேவை எப்படிச் சமாளிக்க முடியும்.

ஏற்கனவே புகையிரத திணைக்களம் பெருநஷ்டத்திலேயே இயங்கி வருகிறது. ஓரளவு தானும் வருவாயைக் கொடுத்தசேவை வடபகுதிக்கான புகையிரத சேவையாகும் இன்று அதுவும் இல்லை. புகையிரத சேவை மேலும் நஷ்டத்தையே தேடிக்கொண்டிருக்கின்றது. இவ்வேளை ஜனாதிபதி அண்மையில் பேசிய பேச்சு ஒன்று ஞாபகத்திற்கு வருகிறது. 'லாபத்தைத் தராது நஷ்டத்தில் இயங்கும் அரசு நிறுவனங்களை மூடிவிடவேண்டும் அல்லது தனியார் வசம் ஒப்படைக்க வேண்டும்' என்பதே அப்பேச்சுக்கும் அந்த அர்த்தத்தில் பார்த்தால் இலங்கை புகையிரதசேவையும் விரைவில் தனியார் வசம் போய்விடும் போல் தெரிகிறது. ஏற்கனவே இ. போ. ச. சேவை சீரழிக்கப்பட்டு இன்று தனியார் பஸ் சேவை மேலோங்கி உள்ளது நடைமுறை. அதுபோல் முன்னைய திட்டத்தின்படி புகையிரத சேவை யப்பானிய நிறுவனம் ஒன்றிற்கு கைமாற்றப்படும் நிலை வந்துள்ளதா என்றே கேட்கத் தோன்றுகிறது.

அந்த நிலை வருவதற்கு முன் புகையிரதசேவை சீரழிய விடப்படவேண்டும் அல்லவா? அதில் ஒரு அம்சமே வடபகுதி புகையிரதச் சேவையை நிறுத்தி வைக்கும் திட்டம் போலும். தற்போது தனியார் துறை பஸ் முதலாளிகளுக்கே இதனால் கொள்ளை லாபம் கிடைக்கிறது. புகையிரதத்தில் 55 ரூபா செலவாகும் சாதாரண கொழும்பு பிரயாணத்திற்கு தனியார் பஸ்சில் ரூபா 100 கொடுத்துச் செல்ல வேண்டி உள்ளது.

யூ. என். பி ஆட்சியில் எல்லாத்துறைகளும் பெரு முதலாளிகளுக்காகவும், வெளிநாட்டு கம்பனிகளுக்காகவும் தாரைவார்க்கப்பட்டு மக்களது வாழ்க்கை நிலை அமுக்கப்பட்டதையே இது வரை காணக் கூடியதாக இருந்தது. இப்போது எஞ்சியுள்ள புகையிரத் சேவையும் பெருமுதலாளிகளுக்காகப் படிப்படியாகச் சீர்குலைக்கப்பட்டு வருகிறது. அதில் குறிப்பான அம்சமே வடபகுதிக்கான புகையிரதசேவை முடக்கப்பட்டிருப்பதாகும். இதனால் மக்கள் படும் அவஸ்தை பற்றி ஒரு மக்கள் நலன் சார்ந்த அரசுக்கு மட்டுமே அக்கறை இருக்கமுடியும். இது மக்கள் விரோத அரசு அல்லவா? அதன் இயல்பை ஒவ்வொன்றிலும் காட்டத்தானே செய்யும்.

## கேலிக்கூத்து பாணியில் தென் இந்திய அரசியல்

இந்தியாவில் தமிழ்நாட்டில் தி. மு. கவிற்கும், ஆட்சி புரியும் அ. இ. அ. தி. மு. கவிற்கும் இடையில் இடம் பெறும் அரசியல் சர்ச்சைகளும் போட்டிகளும் கேலிக்குரியனவாகவே உள்ளன. இது பற்றி நம்மவர்களில் பலர் அலட்டிக்கொள்வதில்லை. ஏனெனில் 'தாயகத் தமிழர் தலைவர்களின்' குட்டு அம்பலமாகி விடும் என்ற பயத்தினாலாகும். ஆனால் அத்தலைவர்களின் விருப்பங்களையும் மீறி செய்திகள் வந்த வண்ணமே இருக்கின்றன.

அண்மைக் காலம் வரை இலங்கைத் தமிழருக்காக கண்ணீர் விட்டு கதறி அழுத கருணாநிதியும் அவரது கழகக் கண்மணிகளும் இப்பொழுது கன்னட மாநிலத்தின் தலைநகரான பெங்களூரில் தமிழர்கள் தாக்கப்படுவதற்கு எதிராகப் போர்க்கொடி உயர்த்துகிறார்கள் போர்க்கொடி கன்னட அரசுக்கு எதிராக அல்ல, எம். ஜீ. ஆர் அரசுக்கு எதிராகவே, தமிழர்கள் தாக்கப்படுவதைப் பற்றி அதிக அக்கறை கொண்டு அல்ல. தனது எதிரியை தாக்க நல்லதோர்தடி கிடைத்த சந்தர்ப்பத்தை கருணாநிதி பயனடுத்தப்பார்க்கிறார் எம். ஜீ. ஆர். அரசு இந்த விடயத்தில் பாராமுகமாக இருப்பதற்கு கருணாநிதி கூறும் காரணம் ஜெயலலிதா ஒரு கன்னடக்காரியாம், திராவிட இயக்கங்களின் வரலாறே இனம், சாதி, மொழிக் குரோதங்களைத் தூண்டி அரசியல் லாபம் பெறும் அடிப்படையைக் கொண்டது. பெரியார் தொடங்கி அண்ணா வரை பின்பு அண்ணா தொட்டு கருணாநிதிவரை சகலரினதும் வியாபாரம் ஒன்றாகவே இருந்து வருகிறது.

கருணாநிதி—எம். ஜீ ஆர் போட்டியில் தமிழர்கள் எவ்வித பயனையும் பெறவில்லை. மொத்தத்தில் ஏமாற்றப்பட்டவர்களாகவே உள்ளனர். எந்த விடயத்திலும் இந்த விடயத்திலும் இந்த இருவரும் ஒருவருக்கொருவர் எதிராகவே செயல்பட்டு வருகிறார்கள் நோக்கம் பதவிவெறியும், சொத்தாசையுமே அன்றி தமிழர் நலன், தமிழ்மொழிப் பாதுகாப்பு என்பதெல்லாம் வெறும் சினிமா டுப்புக்களே இவர்களின் எட்டிக்குப் போட்டிவேலையில் கடைசியாக மதுரை ஆதீனமும் மாட்டுப் பட்டுக் கொண்டார். பாலம் சுவாமி கோட்டுக்கு போக வேண்டி வந்துவிட்டது.

ஒரு காலத்தில் அண்ணாவும் தம்பிமாரும் ஆதீனங்களை எதிர்த்து அரசியல் செய்தவர்கள். இன்று கருணாநிதி ஆதீனத்தை உசுப்பி விட்டு அதன் மூலம் ஆதரவு தேட முயன்றார். எம். ஜீ. ஆர் சும்மாவிட்டாரா? அந்த ஆதீனத்தையே கோர்ட்டில் மாட்டிவிட்டார். ஆதீனத்தை எம். ஜீ. ஆர் கோட்டிற்கு இழுத்து விட்டாரே என்று கழகக் கண்மணி

(6ம் பக்கம் பார்க்க)

# இனவாதமும் நடுத்தரவர்க்கமும்

★ இமயவரம்பன் ★

இலங்கை அரசியலில் இனவாதம் இன்று ஒரு முக்கிய பங்கு வகிக்கிறது. 1948க்கு முன்பும் பின்பும் சாதி, மத, பிரதேச, இன உணர்வுகள் அரசியலில் தாக்கம் செலுத்திய போதும் 1948ன் பின்பு அவை மேலும் படிப்படியாக வளர்ச்சிபெற்று இன்று தொடரான பகிரங்க இனவாத நடவடிக்கைகள் பற்றி எவருமே வியப்படைய முடியாத நிலைவரை வளர்ந்துள்ளன. 1958 இனக்கலவரமும் இந்நூற்றாண்டின் ஆரம்பத்தில் நடந்த சிங்கள-முஸ்லிம் கலவரமும் பற்றி யாரும் பெருமைப்பட்டுச் சொன்னவோ அவை பாதிப்புற்ற மக்களின் நியாயமான உணர்ச்சிகளின் வெளிப்பாடு என்று நியாயம் கற்பிக்கவோ முனையவில்லை. 1958இல் அந்த நிகழ்ச்சிகள் பற்றி (இனவாதிகள் கூடப்) பகிரங்கமாகப் பேசும்போது வெட்கப்படக் கூடிய நிலை இருந்தது. 1977 தேர்தலின் பின்பு நடந்த கலவரங்கள் விஷயத்தில் அரசாங்கமோ, அதன் ஆதரவாளர்களோ அரசாங்கத்திலும் வெளியிலும் உள்ள இனவாத அரசியற் பிரமுகர்களோ கொண்டிருந்த கண்ணோட்டம் வேறானது. அசட்டை, அலம்பாவம் போன்றன அதன் வெளிப்படையான இயல்புகளாகக் காணப்பட்டன. பேச்சு வார்த்தைகள் மூலம் பிரச்சனைகள் தீர்க்கப்படுவதை அறவே விரும்பாத போக்கும் (சம்பவங்கள் பற்றி மனவருத்தப்படாமை ஒரு புறமிருக்க, அவற்றைப் பற்றிய) விமர்சனங்கள்மீதுசினங்கொள்ளும் போக்கும் பரவலாகக் காணப்படுகின்றன, இனவாதச் சிங்கள நாளேடுகளில் மட்டுமன்றித் தேசிய நாளேடுகளில் கூட பெரும்பான்மை இனவாதம் அங்கீகாரம் பெற்ற ஒரு போக்காக அவதானிக்கக் கூடியதாக உள்ளது.

## சிங்கள இனவாதமும் தமிழ் இனவாதமும்

இனவிரோத உணர்வுகள் தமிழ்ப்பேசும் மக்களிடையே இருந்தாலும் அவை பத்திரிகைத் தணிக்கை போன்ற காரணங்களாலும் பிற சூழ்நிலைகளின் நிர்ப்பந்தங்களாலும் (ஒப்பீட்டளவில்) கட்டுப்பாடான அளவிலேயே வெளிப்பட்டுள்ளன. சிங்கள இன விரோதமான கருத்துக்களை உரையாடல்களில் கேட்கலாமாயினும், வெளிநாடுகளிலிருந்து வரும் பிரசுரங்களையும் ஒரு சில இரகசிய துண்டுப்பிரசுரங்கள் மற்றும் மறைமுகமான முறையில் கூறப்படும் கருத்துக்கள் போக, பகிரங்கமான சிங்கள எதிர்ப்பு இனத்துவேஷப் பிரசாரம் சாத்தியமான ஒன்றாக இல்லை.

இனப்பகை பற்றியோ துவேஷ உணர்வுகளின் கூர்மை அடைதல் பற்றியோ நமக்குள் வீண் பிரமைகட்கு அவசியமில்லை. இன்றைய அரசியற் பிரச்சனைகளில் உடனடியாக நம் கவனத்தை வேண்டிநிற்கும் பிரச்சனை தேசிய இனப் பிரச்சனை என்று நாம் கூறும் போது அது எவ்வளவு சிக்கலானதாகியுள்ளது என்பதையும் அது எவ்வளவுதூரம் அபாயகரமானதாக உள்ளது என்பதையும் பற்றிய உணர்வின் அடிப்படையிலேயே கூறுகிறோம். உண்மைகளை மூடிக் கட்டியோ அல்லது விகாரப் படுத்தியோ தீர்வுகளைக் காட்டவேண்டிய நிர்ப்பந்தம் நமக்கு இல்லை.

சிங்களப் பேரினவாதிகள் எனினும் தீவிர பிரிவினைவாதிகள் எனினும் எவ்வளவு தூரம்தான் தேசம், வரலாறு இனஉணர்வு என்ற அடிப்படையில் தங்களது வாதங்களை முன்வைத்தாலும், இறுதியில், பிரச்சனைகள் கல்வி, வேலைவாய்ப்பு, நிலம் என்றவற்றையே சார்ந்துநிற்கின்றன. அரசாங்கத்தின் நெடுபீடிகள், பொலிஸ் ராணுவப் படையினரது நடத்தை இனவாத வன்முறை, பயங்கரவாதம் போன்றயாவுமே அடிப்படைப் பிரச்சனைகளைச் சாராதன அடிப்படைப் பிரச்சனைகள் சரிவரக் கையாளப்படாமையும் அவை திசை திருப்பப்பட்டமையும் காரணமாக ஏற்பட்ட விளைவுகளே அவை எனலாம்.

## அரசியலில் இனவாதம் செலுத்தும் ஆதிக்கம்

அவ்வாருயின் நாட்டின் அரசியலில் இனவாதம் இவ்வளவு தூரம் ஆதிக்கம் செலுத்துவது எவ்வாறு சாத்தியமாயிற்று? தமிழ்—சிங்கள இனங்களிடையிலும் கீழ்த்தர நிரந்தரப்பகைமை இருந்தது என்பதோ இரு இனங்களிடையிலும் எக்காலத்திலும் நல்லுறவு இருந்ததில்லை என்பதோ இலங்கை வரலாறு எப்போதுமே இன வேறுபாடுகளின் அடிப்படையிலேதான் இருந்துவந்துள்ளது என்பதோ மிகவும் தவறுனதும் அரைகுறைத் தகவல்களது அடிப்படையிலானதுமாகும். மனிதர்களிடையே இன உணர்வுகளைத் தூண்டிவிடவும் இன வெறியை உருவாக்கவும் தூய இனம், தமிழ், சிங்களரதம் போன்ற கோஷங்கள் பயன்படுவனவே தவிர இலங்கையில் உள்ள தமிழர்களும் சிங்களவர்களும் சிலர் காட்ட நினைவதுபோல 'தூய' இனத்தவர்கள் அல்ல. மொழி மத வேறுபாடுகள் மக்களைப் பிரிக்கப் பயன்படுகின்றன. அவை யாரால் யாருக்குப் பயன்படுமாறு பாவிக்கப்படுகின்றன என்பதை நாம் உணர்ந்து கொண்டால் நிலைமைகளை நிதானமாக அணுக முடியும்.

## இனப் பகையால் பயன் பெறுவோர்

சமுதாயத்தில் மனிதர்கள் சேர்ந்து வாழும் தேவையே அவர்களைக் குழுக்களாக ஒன்றுபடுத்துகிறது. இவ்வாருக சமுதாயஅமைப்பு ஏற்படுத்தும் குழுக்களிடையே வெவ்வேறு மட்டங்களில் ஒற்றுமையும் முரண்பாடுகளும் இருக்கின்றன. ஆயினும் இம்முரண்பாடுகள் அடிப்படையில் பகைமையானவை அல்ல. சில சூழல்களும் வரலாற்று நிகழ்வுகளும் பகைமையான உறவுகட்குக் காரணமாகலாம் என்ருலும் இன, மத, மொழி, பிரதேச கலாசார அடிப்படைகளிலான வேறுபாடுகள் மனிதர்களை வேற்றுமைப்படுத்தக் காட்டுமளவுக்கு மனிதர்களைப் பகை இனங்களாகப் பிரிக்க அவசியமில்லை. மாருக வேறுபட்ட இரு இனங்களிடையிலான உறவு இரு இனங்களதும் வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் ஆதாரமாக இருக்க முடியும். பகைமையான உறவுகள் எந்த இனத்தினது நலனுக்கும் உகந்ததல்ல. அவ்வாருயின் பகைமையான உறவுகளைச் சாத்தியமாக்குவது என்ன? இனங்களிடையே பகை உணர்வுகளை வளர்ப்பதன்மூலம் நன்மையடையக் கூடிய பிரிவினர்கள் தான் பகைஉணர்வுகளை வளர்ப்பதற்கு ஆதாரமாக இருக்க முடியும் ஆயினும், இனங்களிடையிலான பகைமை மூலம் உண்மையில் நன்மை அடைய முடியாத சமுதாயப் பிரிவினரும் இனவாதத்திற்குத் துணைபோகிருர்கள். இது எவ்வாறு சாத்தியமாகிறது?

## அயர்லாந்துப் பிரச்சினை இன மதப் பிரச்சனை அல்ல

மேலோட்டமாகப் பிரச்சனைகளை அணுகும்போது வேண்டுமாயின் மனிதர்கள் எல்லாருமே இன அடிப்படையில்தான் செயற்படுகிருர்கள் என்ற முடிபிற்கு வரமுடியும். சமுதாயத்தில் சாதி, இனம், மதம், மொழி, கலாசாரம் என்பனை உள்ளன. சமுதாய வாழ்வில் இவை பலவேறு காரணங்களால் முக்கியத்துவம் பெறுகின்றன, தாக்கம் செலுத்துகின்றன. எனவே ஒருவனுக்குத் தன் மதம், மொழி, இனம், சாதி என்பன பற்றிய சுயஉணர்வு தொடர்ந்தும் இருக்கவே செய்யும். இவற்றின் முக்கியத்துவம், எவ்வகையிலும்' குறிப்பிட்ட சமுதாயச் சூழலுக்கு அப்பாலானது அல்ல. சமுதாயத்தில் உள்ள வேறு முக்கியமான முரண்பாடுகளின்வெளிப்பாடு சாதி' மத, மொழி, இனவடிவங்களில் வெளிப்படக்கூடும். எனவே அடிப்படையான முரண்பாட்டை அறியாமல் பிரச்சனைகளை அணுகும் போது சினேகமுரண்பாடுகளுக்கும் பகைத்தன்மை வழங்கப்பட

(5ம் பக்கம் பார்க்க)

# நெற்காணியை விற்று டெலிவிஷன் வாங்குவதா?

## பேராசிரியர் கருணுரட்ண அரசின் கொள்கையை தாக்குகிருர்

திறந்த பொருளாதார முறையின் கீழ் ஆடம்பரப் பொட்கள் அத்தியாவசியமானவையாக ஆக்கப்பட்டுள்ளன. எமது பாரம்பரியம், பண்பாடு, நல்வியல்புகள் ஆகியவற்றைச் சீரழித்துள்ள இத்திறந்த பொருளாதாரக் கொள்கை மக்களை நிரந்தர கடனாளிகளாக்கியுள்ளது.

அமெரிக்க ஏகாதிபத்தியவாதிகள் முழு உலகத்திலும் கடன் தத்துவத்தைப் போதித்துள்ளனர் அவர்களது வர்த்தகக்கொள்கை 'இப்போது பொருளை வாங்கு, பின்னர் பணத்தைத் தா' என்பதாகும் அமெரிக்காவில் பெரும்பாலனவர்கள் மோட்டார் கார்களை வைத்திருக்கின்றனரெனினும் அவர்களில் எவரும் உடன் பணத்திற்கு வாங்காமல் தவணை முறையிலேயே பணத்தைச் செலுத்துகின்றனர். இக் கொள்கையினுல் கடன் நிரந்தரநிலையைப் பெற்றுள்ளது.

இவ்வகையான கடன் வசதிகள் மூலம் எம்நாட்டு மக்கள்வர்த்தகர்களிடமிருந்து ரெலிவிஷன் குளிர்சாதனப் பெட்டிகள் மற்றும் இவ்வகை ஆடம்பரப் பொருட்களைப் பெற்றுக் கொள்கின்றனர். இதன் மூலம் தம்மைக் கடனாளிகளாக்குகின்றனர். தற்போது நிலவும் சமூகப் போக்கில் அவ்வகை ஆடம்பரப் பொருட்கள் சமுதாய அந்தஸ்தைப் பேணுவனவாக உள்ளன. எனக்குத் தெரிந்த பெண் ஒருவர் தனது நெற்காணியை விற்றுவிட்டு டெலிவிஷன் வாங்கியுள்ளார். மத்திய கிழக்கிலிருந்து நாடு திரும்பியுள்ள இன்னெருவர் மயிர் உலர்த்தும்சாதனம் ஒன்றைக் கொண்டு வந்துள்ளார்.

திறந்த பொருளாதாரக் கொள்கையின் கடையற்ற இறக்குமதிகள் நிறுத்தப்படும் வரை பெரும் சுமைகளினுல் அமிழ்த்தப் பட்டுள்ள மக்களுக்கு விமோசனம் ஏற்படமாட்டாது.

சாதாரண பொலிஸ் உத்தியோகஸ்தனின் மகனுகிய நான், நான் சார்ந்துள்ள வர்க்கம் பற்றி கவனத்துடன் இருப்பதுடன், எந்தவித உயர்பதவிக்காகவும் எனது வர்க்கத்திற்கு துரோகமிழைக்கமாட்டேன்.

எனது வலது கால் முழங்காலுடன் கழட்டப்பட்ட நிலையில் எனக்கு ஒரு காலே உள்ளது. அடுத்தகாலையும் இழக்கும் நிலை ஏற்பட்டாலும் எமது தலைவர்கள் சிலரது வெளிவேடங்களை அம்பலமாக்கும் பணிகளைத் தொடர்ந்தும் செய்வேன்.

இன்று எமது நாட்டு பௌத்தர்களிடம் பௌத்த கோட்பாடுகள் கைக்கொள்ளப்படவில்லை. தமது தாய் தந்தையர்களை விற்றேனும் செல்வந்தராயுள்ளவர் கௌரவமானவராக மதிக்கப்படுகிருர். பிக்குகள்கூட பௌத்த தத்துவங்களைக் கைக்கொள்ளவில்லை. அப்படியானவர்கள் பௌத்த சாசனத்திற்கு அபகீர்த்தியானவர்களாவர்.

அமெரிக்க ஜனதிபதியோ ஆங்கிலராணியோ வெளிநாடு செல்வதற்குமுன் சேச்சுக்குப் போய் பிசப்பின் ஆசீர்வாதம் பெறுகின்றனர். ஆனுல் எமது பிக்குமார் கட்டுநாயக்கா விமான நிலையத்திற்குச் சென்று வெளிநாடு செல்லும் எமது தலைவர்களை பிரித் ஓதி ஆசீர்வதிக்கின்றனர். விமான நிலையத்தில் பிரித்ஓதும் நிகழ்ச்சிகளில் பல மணித்தியாலங்களைக் கழிக்கின்றனர். இப்படிப்பட்ட நடத்தையை மகாசங்கத்தில் காணமுடியாது.

பிக்குவானவர் சிங்கம் போன்றவரேயன்றி நரியைப் போன்றவரல்ல ஆதலால் அநீதி, அக்கிரமம், லஞ்சம், ஊழல் என்பவற்றிற்கெதிராக சிங்க கர்ஜனை செய்யவேண்டுமேயன்றி அவற்றைக் கைக்கொள்ளும் தலைவர்களை நரி போல் புகழ்ந்து போற்றக் கூடாது.

நான் தலைவர்களைப் புகழ்ந்துபேசியிருந்தால் சுகபோகங்களை அனுபவிக்கக் கூடிய வெளிநாட்டுத் தூதுவர்பதவியை பெற்றிருப்பேன் நாட்டில் நிலவும் சமூக சீரழிவுகளைப் பார்க்காமலும் கேட்காமலும் இருக்க என்னுல் முடியவில்லை. அவற்றையிட்டு மௌனம் சாதித்தால் அது என் வர்க்கத்திற்குச் செய்யும் துரோகம்.

நான் எந்தவொரு அரசியற் கட்சியினதும் அங்கத்தவனல்ல அப்படியிருந்தும் திமைபுரியும் அரசின் தலைவர்களை அம்பலப்படுத்துவது எனது கடமையும் பொறுப்புமாகும். இவற்றைச் செய்யும் போது எமக்கெதிராக சைக்கில் செயின் மற்றும் ஆயுதங்களும் பாவிக்கப்படலாம். எனினும் இச்சமுதாய விமர்சனத்தைச் செயவதை நிறுத்தமாட்டேன். இவ்வாறு களனிப் பல்கலைக்கழகத் தத்துவப் பேராசிரியர் W. S. கருணரட்ண அவர்கள் துட்டிநிப்பிட்டிய மெட்சவச பௌத்த (தர்ம) பாடசாலைப் பரிசளிப்பு வைபவத்தில் உரையாற்றும்போது குறிப்பிட்டார்.

★

# தேசியப் போராட்டமும் வர்க்கப் போராட்டமும்

சமூகப் பிரச்சனைகள் ஒவ்வொன்றும் பல்வேறு வகையினதான தொடர்புகளை வலைப்பின்னலாகக் கொண்டுள்ளமையினால் மிகச் சிக்கலானவையாகும். அதிலும், ஒரு வர்க்க சமுதாயத்தில் பல்வேறு வர்க்கங்களினதும், ஒரே வர்க்கத்தினுள்ளேயுள்ள பல குழுக்களிடையேயும் நிலவும் கருத்துவேறுபாடுகள் காரணமாக ஒவ்வொரு பொருள் குறித்தும் பல்வேறு அபிப்பிராயங்கள் உருவாக்கப்படுவது தவிர்க்கவியலாத ஒன்றாகும்.

இத்தகைய சிந்தனை மோதல்களில் அதிகம் குழப்பத்துக்குள்ளான விடயங்களில்ஒன்று தேசியப்போராட்டம் தொடர்பானதாகும். இத் தேசியப் போராட்டம் முதலாளித்துவத்தோடு உடன்பிறந்து இன்று பாட்டாளி வர்க்கத்தினால் தீர்வு காணப்படவேண்டிய ஒன்றாகியுள்ளது. இதன் சித்தாந்தரீதியான தாக்கம் பாட்டாளி வர்க்கம் உலகம் முழுவதையும் வென்றிகொண்டு, சோஷலிச அமைப்பு உலகமெங்கும் நிர்மாணிக்கப்பட்ட பின்னரும் கூடச் சிலகாலம் நின்று நிலவவே செய்யும். இக் காரணத்தினாலும் பாட்டாளிவர்க்கம் சர்வதேச முதலாளித்துவத்திற்கு எதிராக நடாத்தும் வர்க்கப்போராட்டத்தில் தேசியப் போராட்டம் பாட்டாளிவர்க்கத்தின் விடுதலைப் பாதைக்கு உந்து சக்தியாக அமைந்துள்ளமையினாலும், தேசியப் போராட்டத்தின் குறிக்கோள்கள் கூடப் பாட்டாளி வர்க்கத்தலைமையினாலேயே ஈட்டப்பட முடியுமாதலினாலும்— தேசியப் போராட்டத்துக்கும் வர்க்கப் போராட்டத்துக்கும் மிடையிலான உறவு தெளிவாக வரையறுக்கப்படவேண்டியுள்ளது.

இரண்டாம் உலக யுத்தத்தின் பின் கீழைத்தேசங்கள் தமது தேசிய விடுதலைப் போர்களின் வாயிலாக அரசியல் சுதந்திரத்தை ஈட்டிக்கொண்டன. இருந்தாலும், விடுதலைக்குப் பின் ஆட்சியதிகாரத்தைப் பெற்ற முதலாளி வர்க்கப்பிரிவினர் ஏகாதிபத்தியங்களில் சார்ந்து நின்று, தேசம் எதிர்நோக்கிய பாரிய பிரச்சனைகளுக்கு சீரான தீர்வுகளை ஈட்டமுடியாதவரானார்கள். இதன் விளைவாக விடுதலைக்குப்பின் இத்தேசங்கள் பிரதேச-இன-மத ரீதியான மோதல்கள் எதிர்நோக்குவனவாயிற்று. இதன் உச்சக்கட்டத்தில் இலங்கையும், இலங்கையை 'இரட்சிக்கப் பிறந்த' இந்தியாவும் இன்று மல்லாடிக்கொண்டிருக்கின்றன.

இப்பொதுவான வரலாற்றுப் போக்குடன் இலங்கை தனக்கேயுரித்தான விசேஷ அம்சங்களையும் கொண்டுள்ளது. அதற்கான புறச்சூழ்நிலைகளை நிர்ணயித்ததில் ஆங்கிலேய ஏகாதிபத்தியத்திற்கு பெரும் பங்கிருந்தது. அவர்களுடைய பொருளாதார நலனைத் தகர்க்காதிருக்கும் பொருட்டு அவர்கள் மேற்கொண்ட அரசியல்-நிர்வாக அமைப்புகள் சுதந்திரத்தின் பின்னரும் அதிக மாற்றமின்றி அவ்வாறே விடப்பட்டிருந்தன. அது வளர்ந்துவந்த புதிய சமூக சக்திகளுக்கு ஈடுகொடுக்கமுடியாததாயிருந்து, அவர்களுடைய பிரித்தாளும் தந்திரத்தைச் செயலாக்கிக் கொண்டது-பிரதானமாக, ஆங்கிலேயராட்சிக்காலக் கல்வி, நிர்வாக உயர்பீடங்களைப் பெரும்பாலும் தமிழர் பெற்றுக்கொள்ளவகைசெய்த போது, 'தாய்மொழிக்கல்வி' படித்த சிங்களவரை வேலை தேடி நகர்ப்புறம் விரட்டியது. இந்தச் சமூகப் பின்னணி தனிச் சிங்கள சட்டத்துக்குக் கால்கோலாயமைந்தது. அது (சிங்களம் அரசகரும மொழியாவது) ஒரு பகுதியாயிருந்த போதிலும், பிரதானமாக யூ. என். பியின் பெருமுதலாளிவர்க்கக் கொள்கையின் ஏகாதிபத்தியச் சார்புக்கு எதிரான எழுச்சியே தேசிய முதலாளிவர்க்கம் (ஸ்ரீலங்கா சு. க. தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு) 1956 இல் ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்ற வழிவகுத்தது.

## உண்மையான தேசியப் போராட்டத்தின் வெற்றி பாட்டாளி வர்க்கத்தின் தலைமையாலேயே சாத்தியம்

இருந்தாலும், 'தமிழ்த் தலைவர்களை' பொறுத்தவரை சிங்களம் அரசகரும மொழியானது தான் மிகமிகப் பிரதான விஷயமாக இருந்தது. இதன் வர்க்கச்சார்பு இரகசியமான ஒன்றல்ல. உண்மையில் 'தமிழ்த் தலைவர்களுக்கு' 'ஏகாதிபத்திய-பெருமுதலாளித்துவ நலன், தேசிய முதலாளிவர்க்கத்தின் தேசியமயக்கொள்கை உள்ளிட்ட நடவடிக்கைகளினால் தகர்க்கப்படுவது பற்றியே எதிர்ப்புணர்வு இருந்தது. அதைக் கவர்ச்சியான இனப்போர்வை கொண்டு மறைத்து விடக்கூடியதாகத் தென்னிலங்கையெங்கும் அதிகாரபீடங்களை நிறைத்துக்கொண்ட மத்தியதரவர்க்கத்தின் நலன் இருந்து வந்தது.

இவ்வாறன்றி இனப்பிரச்சனைக்கான தீர்வில் தான தமிழ்த்தலைவர்கள் கண்ணுங்கருத்துமாயிருந்தனர் என்று சொல்லிவிட முடியாதவகையில் அவர்கள் நடந்து காட்டினர்கள். அன்றைய நெருக்கடி மிக்க இனப்பிரச்சனைக்கு தீர்வு காண வேண்டி பண்டா-செல்வா ஒப்பந்தம் கைச்சாத்திடப்பட்டது. அதைக்கிழித்தெறிய வற்புறுத்தி (அதன் தீர்வு தனிநாடு வழங்குவதற்குச் சமனென்று இன்றுங் கூறும்) பெருமுதலாளிவர்க்கத்தின் பிரதிநிதி, இன்றைய ஜனாதிபதி ஜே. ஆர், அன்று கண்டியாத்திரை புறப்பட்டார். அதை அரசு முறியடித்தது; இலங்கையின் சுதந்திரம் பேணப்படுவதற்கு இனப்பிரச்சனையின் தீர்வு எவ்வகையில் அவசியமானது என்ற விளக்கம் சிங்களமக்கள் மத்தியில் அன்றைய பிரதமர் பண்டாரநாயக்காவினால் எடுத்து விளக்கப்பட்டது.

இந்த வேளையில் ஒப்பந்தத்தின் பங்குதாரர்களான தமிழ்த்தலைவர்களே, பேச்சுவார்த்தையினாலோ—ஒப்பந்தம் நிறைவேறி விட்டால் பிரதேசசபையூடாகவே தீர்க்கக்கூடிய ஒரு பிரச்சனையைப் பெரும் பிரச்சனையாக ஆக்கி 'ஸ்ரீஎதிர்ப்புப்' போராட்டத்தை நடாத்தினார்கள், அது சிங்கள இனவாதிகளுக்கு ஊட்டமளித்து, முடிவில் இனக்கலவரமாக உருவெடுத்தது; ஒப்பந்தமும் கிழித்தெறியப்பட்டது.

இதைப் பின்னர் தமிழ்த் தலைவர்கள் எப்போதும் தமக்கு வாய்ப்பாக ஆக்கிக் கொண்டார்கள், இது சிங்கள முற்போக்கு சக்திகளுக்கு எதிராகவும் யூ. என். பிக்கு அனுசரணையாகவும் தமது கொள்கையை வகுத்துக் கொள்வதற்கு அவர்களுக்கு சிறந்த சாட்டாக ஆகிவிட்டது.

இந்த வகையில் 1970 இல் ஸ்ரீலங்கா சு. க. தலைமையிலான கூட்டு முன்னணி அரசு முன்வைத்த தரப்படுத்தல், வேலைவாய்ப்பில் பரவலாக இலங்கை முழுவதும் யாழ்ப்பாணம் பெற்றிருந்த சலுகை இழக்கப்பட்ட நிலையில், மேலதிகமாக உயர்கல்வியிலும் தடையேற்படுத்தி விடவே தமிழர் தலைவர்களுக்கு கறுப்புக்கொடி காட்டப் பெருவாய்ப்பேற்படுத்திக் கொடுத்தது, அப்போது யாழ்ப்பாணத்திற்குள் பொங்கியெழுந்த குட்டி முதலாளித்துவத் தேசியவாதமும், பெருமுதலாளித்துவத் தேசிய வாதத்தின் தலைமையில் அணிதிரள, பழைய கொள்கைகள் சோடை போன நிலையில் தமிழ்த்தலைவர்கள் தனிநாட்டுக் கோஷத்தினுள் தஞ்சம் புகுந்தனர்.

இத்தனிநாட்டுவிவகாரத்தில் பெருமுதலாளி வர்க்கத்தைப் பொறுத்தவரை அது ஒரு தேர்தல் கோஷமும் பேரம் பேசுவதற்கான உயர்ந்த பட்சக் கோரிக்கையும் மட்டுந்தான். மாறாக, குட்டி முதலாளித்துவத் தேசிய வாதிகள் உணர்வு பூர்வமாக அதைச் செயல்படுத்த முனைந்தனர். அது தமிழ்த்தலைவர்கள் எதிர்பார்க்காத ஒரு விடயம். அதுவரை அவர்கள் 'தமிழ்மண்ணுக்கு' வெளியே உள்ள பிரச்சனைகளுக்காகத் தான் குரல் கொடுத்தார்கள். அப்போது 'தமிழ் மண்ணுக்குள்' உரிமைகள் மறுக்கப்பட்டு, கொத்தடிமைகளாக வாழ்ந்த நிலமற்ற—கூலி விவசாயிகளின் தீண்டாமை ஒழிப்பு உள்ளிட்ட—கம்யூனிஸ்ட் கட்சியின் தலைமையிலான போராட்டம் அவர்களைப் பொறுத்த வரை 'வியட்னாம் குழப்பமாகவும்' 'சங்காய்க் கலவரமாகவும்' தானிருந்தது. அவர்கள் 'தமிழ் மண் காக்கும்' ஆவரங்கால் மாநாட்டு அபிலாஷையில்கூட ஒரு போதும் அக்கறை கொண்டிருந்ததில்லை. அவ்வாறிருந்தால் திட்டமிட்ட குடியேற்றத்தை நடத்திக்கொண்டிருந்த யூ. என். பியுடன்

(5ம் பக்கம் பார்க்க)

இராவணா

பினாலேயே ஈட்டப்பட முடியுமாதலினாலும்— தேசியப் போராட்டத்துக்கும் வர்க்கப் போராட்டத்துக்கு மிடையிலான உறவு தெளிவாக வரையறுக்கப்படவேண்டியுள்ளது.

பெற்றுக்கொள்ளவகைசெய்த போது, 'தாய்மொழிக்கல்வி' படித்த சிங்களவரை வேலை தேடி நகர்ப்புறம் விரட்டியது. இந்தச் சமூகப் பின்னணி தனிச் சிங்கள சட்டத்துக்குக்

இவ்வாறன்றி இனப்பிரச்சனைக்கான தீர்வில் தாமே தமிழ்த்தலைவர்கள் கண்ணுங் கருந்துமாயிருந்தனர் என்று சொல்லிவிட முடியாதவகையில் அவர்கள் நடந்து காட்டி

ஸ்ரீலங்கா சு. க. தலைமையிலான கூட்டு முன்னணி அரசு முன்வைத்த தரப்படுத்தல், வேலைவாய்ப்பில் பரவலாக இலங்கை முழுவதும் யாழ்ப்பாணம் பெற்றிருந்த சலுகை

கொண்டிருந்ததில்லை. அவ்வாறிருந்தால் திட்டமிட்ட குடியேற்றத்தை நடத்திக்கொண்டிருந்த யூ. என். பியுடன்

(5ம் பக்கம் பார்க்க)

# இனவாதமும்

3ம் பக்கத் ............. தொடர் ...

இடமுண்டு. வட அயர்லாந்தின் பிரச்சனை உண்மையில் பிரித்தானிய காலனித்துவத்திற்கும் அயர்லாந்து மக்களுக்கு மிடையிலானது. அதை மத அடிப்படையிலான பிரச்சனையாக அணுகும் போது தீர்வுகள் சிக்கலடைகின்றன. அமெரிக்க நிறவெறிப் பிரச்சனை இன அடிப்படையில் மட்டுமே அணுகப்படும் போது ஒடுக்கப்பட்ட மக்களுக்கு இடையிலான வர்க்க அடிப்படையிலான ஒற்றுமை புறக்கணிக்கப்படுகிறது. இவ்வாறே சாதி, மொழி போன்றவையும் அடிப்படையான வர்க்க முரண்பாடுகளை திசை திருப்பப் பயன்படுகின்றன. இவ்வாறு திசைதிருப்புவதைச் சாத்தியமாக்கும் சூழல்யாது?

## சுரண்டலை மறைக்க இனவாதம் ஒரு கருவி

முதலாளித்துவ சுரண்டல் சமுதாயத்தில் அதிகார வர்க்கமும் தீவிர பிற்போக்கு வாதத்தின் பிரதிநிதிகளும் தம் அரசியல் பொருளாதார நெருக்கடிகளைத் திசைதிருப்ப இனவாதத்தை எப்போதுமே வெற்றிகரமாகப் பயன்படுத்தி உள்ளனர். எங்கேயும் எந்தவிதமான தேசிய உணர்வோ இன உணர்வோ தட்டியெழுப்பப் படுவதற்கு, யதார்த்தத்தில் சாதகமான சூழ்நிலை ஒன்றும் திட்டவட்டமான அரசியல்-பொருளாதார-சமூகவியற் காரணிகளும் இருந்தே ஆகவேண்டும். பொருளாதார நெருக்கடி இன ஒடுக்கல் போன்றவை இவ்வாறான உணர்வுகள் எழுவதற்குச் சாதகமான சூழ்நிலைகளை வழங்குகின்றன. அதிலும் மத்தியதர வர்க்கங்கள் (குட்டி பூஷ்வா) அரசியலில் ஆதிக்கம் செலுத்தும் சூழ்நிலைகளில் பொருளாதாரப் பிரச்சனைகளை இலகுவாக இனவாத அரசியலாக மாற்ற முடிகிறது. ஜேர்மன் பாஸிஸமும் 1965ல் இந்தோனீஸிய மதவெறியும் இந்தவகையைச் சேர்ந்தவைதான். தொழிலாளிவர்க்கம் குறுகிய கால அளவில் இவ்வாறு இனவாதக் கோஷங்களால் திசை திருப்பப்படலாமெனினும் இனவாத அரசியல் தொழிலாளி வர்க்கத்தின் அடிப்படையில் வளரும் ஒன்றல்ல ஏனெனில் தொழிலாளிவர்க்கத்தின் 'உயர்ச்சி' சமுதாய ஏணியிலேயே ஏறமுனையும் நடுத்தர வர்க்கத்தின 'உயர்ச்சியை'ப் போன்றதல்ல, வேலையின்மை விலைவாசி ஏற்றம் போன்ற பிரச்சனைகட்கு இன அடிப்படையிலான காரணங்களைக் காட்டித் தொழிலாளர்களைச் சில சமயம், குறுகிய காலத்திற்குத் திசைதிருப்புவது சாத்தியம். ஆயினும் வளரும் பொருளாதாரப் பிரச்சனைகளின் போக்கில் தொழிலாளிவர்க்கம் மத்தியதர வர்க்கத்தைவிட மிக விரைவாக உண்மையை அடையாளம் கண்டு கொள்கிறது.

## நெருக்கடிகளின் மத்தியில் மத்திய தர வர்க்கம்

மத்தியதரவர்க்கம், குறிப்பாக மூன்றாம் உலகின் நவ காலனிமுறைக்குட்பட்ட நாடுகளின் மத்தியதர வர்க்கம் பொருளாதாரப் பிரச்சனையின் கீழ் சில்வரை வியாபாரம், உயர் உத்தியோகங்கள் போன்ற துறைகளில் கடும் நெரிசலுக்குட்படுகிறது இச் சூழலில் பொருளாதாரப் பிரச்சனையினின்று கவனத்தைத் திசை திருப்ப முனையும் அதிகாரவர்க்கம் சிறுபான்மை இனங்கள் ஆதிக்கம் செலுத்துவதாகக் காணப்படும் துறைகளில் பெரும்பான்மை இனத்தவர் மேலும் வாய்ப்புக்களை பெறலாம் என்று ஆசைகாட்டுவது எளிதில் சாத்தியமாகிறது. பிரச்சனைகள் கடுமையான மோதலுக்குட்பட்டால் தீர்க்கப்படக்கூடிய சூழ்நிலைகளில் பாராளுமன்ற அரசியல் மூலமும் சட்டவாக்கல் மூலமும் செயற்பட முடிகிறது. வேறு சூழ்நிலைகளில் அல்லது சட்டபூர்வமாகச் செய்யப்பட்டவை போதிய திருப்திதராத சூழ்நிலையில் பிரச்சனைகளைத் தொடர்ந்தும் திசைதிருப்பும் தேவையான இனவாதம் மேலும் ஒரு படி வளர்க்கப் படுகிறது.

இனவாத அரசியலின், சுரண்டும் பிற்போக்கான வர்க்கங்கள் இனவெறியையும் கலவரங்களையும் தூண்டிவிடுகின்றபோதிலும், முதலாளித்துவ வர்க்கத்தின் மத்தியில் இனவாதம் ஒரு கருவியேயொழிய வேறெதுவுமல்ல. இதனால், பெருமுதலாளிகளைப் பொறுத்தவரை அவர்களது நலன்கள்மீது தீய பாதிப்பு அற்பமானதே. சுரண்டலில் அவர்கள் இன, மத வேறுபாடுகளின்றி இணைய முடிகிறது. இனவாத அரசியற் சேற்றில் கால் வைத்த நடுத்தர வர்க்கத்தின் பார்வை இனவாத அரசியலுக்குள் மேலும் மேலும் வரையறைப்படுவதுடன் பொருளாதார நெருக்கடி அதனை மேலும் அழுத்தும்போதும் அது இனவாத அடிப்படையிலான தீர்வுகளையே மேலும் நாடுகிறது.

## தொழிலாளி வர்க்க நிலைப்பாடு வேண்டும்

பாராளுமன்ற அரசியலில் செல்வாக்குடையதும் பாராளுமன்ற அரசியற்கட்சிகட்கு அவசியமானதுமான நடுத்தர வர்க்கம் தன்னளவில் சமுதாய மாற்றத்தை வேண்டி நிற்கும் வர்க்கமல்ல அதன் தேவையே இருக்கிற சமுதாய அமைப்பில் தன்னை (தனிநபர் அடிப்படையில்) மேலும் மேலும் உயர்த்திக் கொள்வதேயொழிய வேறல்ல. எனவே பெருமுதலாளித்துவ வர்க்கத்தினது ஆதிக்கம் மோலோங்கியுள்ள போது நடுத்தரவர்க்கத்தின் சிந்தனைகள் இலகுவாக இனவாதத்திற்குப் பலியாகி விடுகின்றன. சூழ்நிலைக்கேற்ப இன, மொழி, சாதி முரண்பாடுகள் அரசியலில் பயன்படுத்தப்படவும் அடிப்படையான முரண்பாடு புறக்கணிக்கப்படவும் இயலுமாகிறது.

எனினும், இந்தகைய திசை திருப்பல் எக்காலத்துக்குமே இயலுமான ஒன்றல்ல. ஏகாதிபத்தியமும் அதன் சார்பான முதலாளித்துவ சக்திகளும் இறுதியில் தம் பொருளாதார, அரசியல் நெருக்கடிக்கு முகங்கொடுத்தேயாக வேண்டும். அந்த நிலையில் நடுத்தர வர்க்கம்தான் ஏமாற்றப்பட்டதை உணரவும் பிற்போக்கிற்கு எதிராகத் திரும்பவும் நேரும். ஆயினும், தொழிலாளி வர்க்கத் தலைமையிலான பலமான அணி ஒன்று கட்டியெழுப்பப்படாதவரை நடுத்தரவர்க்கம் இனவாதச் சகதியினின்று சுயமாக மீள முடியாது. பலமான தொழிலாளிவர்க்க ஐக்கியமும் போராட்ட அணியும் கட்டியெழுப்பப்படாத பட்சத்தில் நடுத்தரவர்க்கம் தன்னையறியாமலேயே பூஷ்வா ஜனநாயகமுறையின் அழிவிற்கும் ராணுவ ஆட்சி அல்லது ராணுவ ஆதரவுடனான ஆட்சி ஒன்று நிறுவப்படுவதற்குமான ஒரு சூழ்நிலையை உருவாக்கவே வழிவகுக்கும்.

★

# சம்பள உயர்வுப் போராட்டத்தில் தாமதம் காட்டக்கூடாது!

தோட்டத் தொழிலாளர்களின் இன்றைய வாழ்க்கை மிகவும் மோசமடைந்துள்ளது. அவர்களது அன்றாட உணவான அரிசி, மா, தேங்காய், தேங்காய்எண்ணெய் மரக்கறி வகைகள் என்பன உச்ச விலைக்கு ஏறியுள்ளன. இது மட்டுமல்ல இவ் உச்ச விலையிலும் கூடத் தரமானவற்றை வாங்குவது என்பது அவர்களுக்கு கஷ்டமானதாகவே உள்ளது. ஏமாற்றும் மோசடியும் தோட்டத்தொழிலாளர்களைத் தொடர்ந்த வண்ணமே இருக்கின்றன.

இந்த அரசாங்கம் கடைசியாகக் கொடுத்த மூன்று சம்பள உயர்வுகளை தோட்டத் தொழிலாளர்களுக்கு கொடுக்கமறுத்து விட்டது. அச் சம்பள உயர்வுகளைப் பெற்றவர்களே இன்றைய வாழ்க்கைச் செலவின் அதிகரிப்பால் அல்லற்படும்போது அச் சம்பள உயர்வுகளைப் பெறாத தோட்டத் தொழிலாளர்கள் எவ்வகையான கஷ்டங்களை அனுபவிப்பார்கள் என்பதை ஒருவர் உணரமுடியும்.

யூ.என்.பி அரசு பதவிக்கு வந்தது முதல், தொண்டமான் அமைச்சர் பதவி பெற்றது முதல் தோட்டத் தொழிலாளர்கள் தமது நீண்டகாலக் கோரிக்கைகள் கிடைக்கும், கிடைக்கும் என்றே நம்பிவந்தனர். மாதச் சம்பளம், ஆண்/பெண் சம சம்பளம், சம்பள உயர்வு போன்றன இன்றுவரும் நாளை வரும் என்றே காத்திருந்தனர் இ.தொ.காவும்—தொண்டமான்—செல்லச்சாமி போன்றோரும் இதோ பேசுகிறோம். அதோ கடிதம் அனுப்புகிறோம் அங்கே ஆணைக்குழு. இங்கே பதவிகளைப் பயன்படுத்தப் போகிறோம் என்றே கூறி வந்தார்கள். தோட்டத்தொழிலாளர்களைப் பொறுத்தவரை வெறும் எதிர்பார்ப்பும் ஏமாற்றமும் மட்டுமே எஞ்சியுள்ளது

இந்நிலையிலே தற்போது இ.தொ.கா, யூ.என்.பியின் தலைமையிலான இ.தே.தோ.தொ சங்கம் உட்பட ஏனைய தொழிற்சங்கங்களும் சம்பள உயர்வுக்கோரிக்கைக்கான போராட்டம் ஒன்றைப் பற்றி அதிகம் பேசி வருகின்றனர். இது கடந்த காலப் பேச்சுப்போல் அன்றி உறுதியான நடவடிக்கையாக அமையவேண்டும் என்பதையே தோட்டத் தொழிலாளர்கள் எதிர்பார்க்கின்றனர்.

தோட்டத் தொழிலாளர்களும், தொழிற்சங்க கீழ்மட்டத்திலும் ஒரு போராட்டத்திற்கான சூழ்நிலைக்கு வந்துள்ளனர். ஆனால் சில தொழிற்சங்க மேல்மட்டத் தலைமையினர் ஏதாவது சாக்குப் போக்குச் சொல்லி இழுத்தடிக்கவே முயலுகின்றனர். ஆதலால் இத்தகைய இழுவல் நழுவல் பேச்சுக்கு இடமின்றி அல்லது பெரிதாகப் பயமுறுத்தி சதிகளைக்கில் சம்பள உயர்வுபெறும் வழிமுறைகளைக் கைவிட்டு நியாயமான சம்பள உயர்வுக்கான உறுதியான ஐக்கியப் பட்டபோராட்டத்தை முன்னெடுக்க சகல தொழிற்சங்கங்களும் முன்வரல்வேண்டும்.

உலகச் சந்தையில் தேயிலைக்கு மிகப் பெரும் கிராக்கியும், விலையும் கிடைத்து வருவதால் அரசு சம்பள உயர்வை மறுக்க எவ்வித நியாயமும் இருக்கமுடியாது. இச் சந்தர்ப்பத்தில் தொழிற் சங்கங்கள் தொழிலாளர்களின் அடிப்படை நலனை முதன்மைப்படுத்தி சம்பள உயர்வுக்கான போராட்டத்தை தாமதிக்காது ஒன்றுபட்டு முன்னெடுக்க உரிய நடவடிக்கைகளை எடுக்க வேண்டும். இதையே தோட்டத் தொழிலாளர்கள் வற்புறுத்துகிறார்கள்.

---

## சீமேந்து தொழிற்சாலையில் தொழிலாளர்களுக்கு பாதுகாப்பு இல்லை!

இலங்கைச் சீமேந்துக் கூட்டுத்தாபனத்தின் அனுசரணையுடன் தொடங்கப்பட்ட லங்கா சீமேந்து லிமிடெட் என்னும் நிறுவனம் புதிதாகத் தொடங்கப்பட்டுள்ளதை யாவரும் அறிவீர்கள் இது சம்பந்தமாகப் பாராளுமன்றத்தில் கூடப்பெரிதாகப் புகழப்பட்டது. ஆனால் இங்கு தொழிலாற்றும் தொழிலாளர்களுக்கு போதிய பாதுகாப்பு வழங்கப்படவில்லை. இதனால் எத்தனையோ உயிர்கள் தொடர்ந்தும் பறிக்கப்பட்டு வருவதை அறிந்திருப்பீர்கள். ஆயினும் மேலும் இம்மாதிரியான பாதுகாப்பு வழங்காதநிலை நீடிக்கப்படுகிறது, கண்ணாடிப்பஞ்சு (Glasswool) இங்கு இயந்திரங்கள் பொருத்தப்படும் பொழுது பாவிக்கப்படுகின்றது, இது தொழிலாளர்களால் பாவிக்கப்படும் பொழுது கையுறை அணிவதுடன், மூக்கிற்கும் பாதுகாப்பு உறை அணியப்பட வேண்டும், இல்லாவிட்டால் இது கையை அரிப்பதுடன், மூக்கின் துவாரத்தின் வாயிலாக உட்புகுந்து அரிப்பதுடன் சுவாசக்குளாயினூடாகச் சென்று உடலின் உட்பக்க உறுப்புகளைச் சேதப்படுத்துவதும் தவிர்க்கமுடியாதது, ஆகையால்தான் இவை கையாளப்படும் பொழுது பாதுகாப்புறை பாவிக்கப்பட வேண்டும் எனவலியுறுத்தப்படுகிறது, ஆனால் இது வெறுமனே கையால் எந்தப்பாதுகாப்புமற்ற தொழிலாளர்களால் கையாளப்படவேண்டும் என்று பலவந்தப்படுத்தப்படுகிறார்கள். பாதுகாப்பு உறைகேட்ட தொழிலாளர்கள் பலர் பழிவாங்கப்படும் சம்பவங்களும் இடம்பெறுகின்றன. முதலாளித்துவ அமைப்பில் தொழிலாளர்கள் சுரண்டப்படுவதுடன், அவர்களின் பொதுச் சுகாதாரத்தைப் பாதிக்கக்கூடியதாக இருப்பினும், இலாபம் கருதி அவர்கள் பலவந்தப்படுத்துவதும் காணக்கூடியதாக இருக்கும் என்பதற்கு இது பொருத்தமான உதாரணமாகும்.

---

## தேசியப்போராட்டமும்

4ம் பக்கத் தொடர்

சல்லாபம் புரிந்து கொண்டிருந்திருக்க மாட்டார்கள். அந்த நிலையில் தமிழ் மண்ணுக்குள் ஆண்டபரம்பரைக்கெதிரான போராட்டங்கள் எப்படி அவர்கள் கவனத்தை ஈர்க்க முடியும்?

இவ்வாறு தமிழ் மண்ணுக்குள் போராட்ட சக்திகளை எதிர்ந்து வந்தவர்கள் தரப்படுத்தலுக் கெதிரானபோர்க்கொடி என்றபெயரில் குட்டி முதலாளித்துவ சக்திகளை உசு ஐந்து கட்சிக் கூட்டில் இணையவேண்டியேற்பட்டது. இந்த ஐக்கியம் படிப்படியாக வளர்க்கப்பட்டு யூஎன்பி எதிர்ப்பு அணியில் தமிழ் மக்கள் இணையும் நிலையைக் கண்ட அரசு தீவிரமாகச் செயற்பட்டுக் கூட்டணியைத் தன் காலடியில் மண்டியிடச் செய்தது. இருந்தாலும் அவர்கள் எதிர்பார்த்த பலன்மட்டும் கிடைக்கவில்லை. தமிழ்மக்கள் கூட்டணியையும் நிராகரித்து யுஎன்பி எதிர்ப்புணர்வில் வளர்ந்துகொண்டே இருந்தார்கள். இந்தநிலைமை குட்டி

முன்னெடுத்ததாலேயே சீனப் புரட்சி சீனாவைச் சோஷலிச பூமியாக மலர வைத்தது. அந்த வெற்றிக்கான முதற்படியை — புதிய ஜனநாயகக் கோட்பாட்டை — வகுத்த போது மாஓ சேதுங் தெளி

தீர்வு நியாயமான மொழிப் பிரயோகம் ஆகியவற்றை வென்றெடுக்க முடியும். இது குட்டி முதலாளித்துவ அவசரத்தன்மைக்கு மாறான, பாட்டாளிவர்க்க நிலைப்பாட்டுக்கு உரித்தான, நிதானமான—

சிந்திக்கவேண்டிய

## செய்திகள்

ஈர்க்க முடியும்?

இவ்வாறு தமிழ் மண்ணுக்குள் போராட்ட சக்திகளை எதிர்த்து வந்தவர்கள் தரம் படுத்தலுக்கெதிரான போர்க்கொடி என்ற பெயரில் குட்டி முதலாளித்துவ சக்திகளை உசுப்பி விட்டார்கள். அவ்வாறு உசுப்பி விடப்பட்ட குட்டி முதலாளி வர்க்கம் தனக்கேயுரித்தான புரட்சியின் அவசரத்தன்மையென்ற நோயினால் பீடிக்கப்பட்டிருந்தது. அது தனது தோழர்களை எதிரிகளை அழிப்பதற்குப் பயன்பட்டவரை பெருமுதலாளி வர்க்கத்தால் அனுமதிக்கப்பட்டு ஊக்குவிக்கப்பட்டது. அது விஸ்வரூபமெடுத்து, தனது வர்க்க சகாவான பெருமுதலாளித்துவ யூ. என். பி அரசு ஆட்சியதிகாரத்தைக் கைப்பற்றிய பின்னர் தனது கட்டுப்பாட்டுக்குள் அதனைக் கொண்டு வர முடியுமென்று கருதிய தமிழ்ப் பெருமுதலாளித்துவத் தலைமையின் முட்டாள் தனமாயிருந்தது. அவ்வாறு அவர்கள் கட்டுப்படுத்தி யூஎன்பியுடன் மீண்டும் வெளிப்படையான உடன்பாட்டுக்கு வர முனைந்ததிலிருந்து வர்க்க சக்திகளுக்கிடையேயான உறவு சிதைந்தது குட்டி முதலாளித்துவத் தேசியவாதம் தனியாகப் பிரிந்து தேசிய இனப்பிரச்சனைக்கு இனவாதக் கூச்சல் தீர்வாகாத நிலையில் மார்க்ஸிஸம் காட்டும் தீர்வுக்கான மார்க்கத்தின் பால் நாட்டங்காட்டத் தொடங்கியது.

இந்தப் புதிய நிலைமையின் காரணமாக, 1977 இறுதிப்பின் பழைய தலைமையின் பித்தலாட்டமான 'சிங்கள மக்கள் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை' என்ற கூப்பாடு நிராகரிக்கப்பட்டு, சிறுகச்சிறுக சிங்கள முற்போக்கு சக்திகளுக்கு ஆதரவும் தேசியரீதியான போராட்டங்களுக்கு ஆதரவு வழங்கலும் ஏற்படத் தொடங்கியது. இதன் நிர்ப்பந்தம் காரணமாக தமிழ்த் தலைவர்கள் ஸ்ரீ. சு. க. உடன் இணைந்த பட்டுக் கூட்டணியைத் தன் காலடியில் மண்டியிடச் செய்தது. இருந்தாலும் அவர்கள் எதிர்பார்த்த பலன்மட்டும் கிடைக்கவில்லை. தமிழ்மக்கள் கூட்டணியையும் நிராகரித்து யுஎன்பி எதிர்ப்புணர்வில் வளர்ந்துகொண்டே இருந்தார்கள். இந்தநிலைமை குட்டி முதலாளித்துவத் தேசியவாதத்துக்கு ஊக்கமளிக்க— அதனைக் கட்டுப்படுத்தும் நோக்குடன் அரசு, பயங்கரவாதத்தை அழிக்கும் நடவடிக்கைகளில் பிரதான கவனம் செலுத்தப்போய், இராணுவத்தினரின் மக்கள் மீதான அட்டூழியங்கள் வளர்ந்தது. பிள்ளையார் பிடிக்கப்போய் குரங்கான கதைபோல-நாளடைவில் வடக்கு, கிழக்கு மாகாணமெங்கும் யூஎன்பியின் எதிர்ப்புணர்வு கொழுந்துவிட்டெரியத் தொடங்கியது.

இறுதியில் யூஎன்பி 'தமிழ்த் தலைவர்களில்' நம்பிக்கை இழந்தது. அந்தக் கையாலாகாத் 'தலைவர்களும்', மக்களின் உள்ளூர் எதிரியிடம் மண்டியிட்டுக் கிடப்பதை விடுத்து சோவியத்தின் தெற்காசியப் பிராந்திய மேலாதிக்கவாத இந்திய அரசிடம் தஞ்சம் புகுந்தனர்.

இவ்வரலாற்றுப்போக்கு கவனத்திலெடுக்கப்படாமல் தற்காலிகமாகக் கிடைக்கும் 'விடுதலையை' எண்ணிச் சோவியத்தின் வலையில் வீழ்வது கண்ணிரண்டைவிற்றுச் சித்திரம் வாங்குவதற்கு ஒப்பானதே. அது மக்கள் விடுதலையாக ஒருபோதும் அமையாது. அவ்வாறு புறச்சக்திகளில் நம்பிக்கைகொள்வது கூட, உண்மையில் தேசிய விடுதலைப் போராட்டத்தின் உள்ளார்ந்த சக்தி எது என்பதைப் புரிந்துகொள்ளாததன் விளைவேயாகும். அந்த மாபெரும் சக்தி நிலத்திற்காகவும் உரிமைகளுக்காகவும் போராடும் நிலமற்ற கூலி விவசாயிகள்தான். அந்தவர்க்கத்தைப் பாட்டாளிவர்க்கத் தலைமையில் அணிதிரட்டித் தேசிய விடுதலைப் போரை முன்னெடுத்ததாலேயே சீனப் புரட்சி சீனாவைச் சோஷலிஸ பூமியாக மலர வைத்தது. அந்த வெற்றிக்கான முதற்படியை — புதிய ஜனநாயகக் கோட்பாட்டை — வகுத்த போது மா ஓ சேதுங் தெளிவாக வரையறுத்துச் சொன்னார்.

"..சாராம்சத்தில் பார்த்தோமானால் தேசியப்பிரச்சனையென்பது உழவர் பிரச்சனையேயாகும்' என்ற ஸ்டாலினின் இகற்த அர்த்தம் என்னவென்றால், சாராம்சத்தில் சீனப் புரட்சியானது உழவர் புரட்சியாகும்; இப்பொழுது நடக்கும் ஜப்பானை எதிர்த்த தாக்குதல் என்பது சாராம்சத்தில் உழவர்களின் தாக்குதலாகும். சாராம்சத்தில் புதிய ஜனநாயகத்தின் அரசியல் என்பது உழவர்களுக்கு உரிமைகளைக் கொடுப்பதாகும்...' (மா ஓ சேதுங் 'புதிய ஜனநாயகம்', பாட்டாளிகள் வெளியீடு, சென்னை 1978 பக் 54-55)

இவ்வாறு பணம், அதிகாரம், உரிமைகள் ஏதும் இல்லாத மக்களுக்காக, அவர்களாலேயே நடத்தப்படுகிறபுரட்சி யென்பது மிகச் சிக்கலானதாகவும் நீண்டகாலத்துக்குரியதாகவும் இருப்பது தவிர்க்க முடியாததே. இதை அவசர விடுதலைக்கு ஆயத்தம் செய்யும் இளைஞர்சக்தி சிரமிப்பதும் கடினமானதே. இருந்தாலும் இத்தகைய புரட்சிகர உணர்வுள்ள இளைஞர்கள் நீண்ட காலத்துக்குரிய சிக்கலான இப்பணியை விட்டு தூரவிலகிச் செல்லாது. தாமே கையேற்று. புரட்சியை வளர்த்தெடுக்கவேண்டிய ஒடுக்கப்பட்ட மக்கள் மத்தியில் சென்று, வளர்ச்சியைத் தூண்டும் பிரச்சாரக்கை மேற்கொண்டு—யூஎன்பி எதிர்ப்பு இயக்கங்களுடாகவும் நிலத்துக்கான, உரிமைகளுக்கான போராட்டங்களுடாகவும் ஸ்தாபனப் படுத்தி, தமிழ்ப் பிரதேசங்களின் பாதுகாப்பு, வேலை-கல்விப் பிரச்சனைகளின் தீர்வு நியாயமான மொழிப் பிரயோகம் ஆகியவற்றை வென்றெடுக்க முடியும். இது குட்டி முதலாளித்துவ அவசரத்தன்மைக்கு மாறான, பாட்டாளிவர்க்க நிலைப்பாட்டுக்கு உரித்தான, நிதானமான— தீர்க்கமான போராட்டப் பாதையாகும்.

இக்கடமையின் சாராம்சத்தைப் புரிந்துகொண்டதுமே பலமான ஐக்கிய முன்னணியின் அவசியம் தெளிவாகிவிடும். அதற்கு இடையூறு, மேலாதிக்க வல்லரசுகள் மூன்று மூலகநாடுகளைப் பிராந்திய யுத்தங்களுக்குள் ஆழ்த்துவதும், மூன்றுமுலக நாடு ஒன்றினுள் இன-மத-பிரதேசப் பிரச்சனைகளை மக்கள் மத்தியிலான முரண்பாடாக அல்லாது எதிரிகள் மத்தியிலான முரண்பாடாக ஆக்கி, மக்கள் குழுக்களை மூட்டி மோதவைக்கும் சூழ்ச்சியையும் புரிந்துகொள்ள முடியும். இதை முறியடிக்க— மேலாதிக்கத்துக்கும் யூஎன்பிக்கும் எதிரான இலங்கை மக்கள் கொண்டுள்ள பிரதான முரண்பாடு கூர்மையடைவதைத் தடுக்கும் சூழ்ச்சிகளை முறியடித்து-மக்கள் இயக்கத்தை முன்னெடுக்கவேண்டும்.

அவ்வாறு மக்கள் எழுச்சி வளர்த்தெடுக்கப்படும்போது ('மார்க்ஸியமும் தேசிய இனப் பிரச்சனையும்' பற்றி ஆராய முற்பட்ட போது லெனின், பாட்டாளி வர்க்கத் தலைமையிலான வெகுஜன இயக்கம் தேய்வடையும் போது தேசியவாதம் மேலோங்கின்றது என்றுரை, அதற்கு மறுதலையாக) தேசியவாதம் தணிந்து தேசியப் போராட்டம் என்பதன் வர்க்க சாராம்சம் தெளிவாகும்; பாட்டாளிவர்க்கத் தலைமையிலான மக்கள் போராட்டத்தினூடாகத் தேசிய அபிலாஷைகளும் பூர்த்தியாக்கப்படும்.

★

## சிந்திக்கவேண்டிய செய்திகள்

"1979ல் இருந்து 1983க் ஆண்டுவரையிலான காலகட்டத்தில் இலங்கை விஞ்ஞான, தொழிநுட்ப துறைகளில் என்றுமில்லாத வளர்ச்சியைக் கண்டுள்ளது அதற்கு உதாரணம் தொலைக்காட்சி, கல்குலேற்றர்கள், கம்பூட்டர்கள் எல்லாம் இலங்கையில் தாராளமாகப் பாவிக்கப்படுகின்றது" இவ்வாறு "விஞ்ஞான வளர்ச்சி" பற்றிப் பேசி இருப்பவர் நம் நாட்டு ஜனாதிபதி ஜே. ஆர். தான்.

—பத்திரிகைச் செய்தி

★

அமெரிக்காவின் பல்வேறு நகரங்களையும் உள்ளடக்கிய பாடசாலைகளில் 30 லட்சம் மாணவர்கள் குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ளனர். கொலை, பலாத்காரம், கொள்ளை போன்ற குற்றச் செயல்களில் ஈடுபட்டுள்ள மேற்படி மாணவர்கள் ஒரு மாதத்தில் சராசரி 6 ஆயிரம் ஆசிரியர்களிடம் தமது கைவரிசைகளைக் காட்டி வருகின்றனர்.

★

"கடந்த யூலை இனவாத வன்செயல்கள் போதை வஸ்துக்களை உண்டவர்களாலேயே செய்யப்பட்டது. நாட்டில் சட்டத்தையும் ஒழுங்கையும் குலைப்பதை நோக்கமாகக் கொண்ட தீயசக்திகளே இனவாத வன்செயல்களில் ஈடுபட்டனர்"

—பிரதமர் பிரேமதாசா

★

செய்திப் பத்திரிகையாகப் பதிவு பெற்றது. செம்பதாகை Registered as a Newspaper in Sri Lauka.

# நமது நாட்டில் வேலைவங்கி ஒரு மோசடியே!!

# விலைவாசி உயர்வு கடிவாளம் அற்ற குதிரை!!

'இந்த நாட்டில் இளைஞர்கள் மீதான ஒரு மோசடியே வேலை வங்கியாகும். அது இரத்தவங்கி போன்றது. தானம் செய்வோருக்காக நாம் காத்திருக்கவேண்டும். இதில் தானம் செய்வோர் எம். பீ.க்களே.'

நான் தலைமைதாங்கும நீதிச்சேவை ஆணைக்குழுவின் கீழ் 1500 முதல் 2 ஆயிரம் வரையிலானோர் வேலை செய்கின்றனர். 1982 முடிவில் அல்லது 1983 தொடக்கத்திலிருந்து கடந்த ஒருவருடமாக சிங்கள, தமிழ் எழுதுவினைஞர்கள், சிங்கள, தமிழ் ஆங்கில சுருக்கெழுத்தாளர்கள், தட்டெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்கள், புத்தகம் கட்டுவோர் போன்ற 492 காலியிடங்களை நிரப்ப நாம் எம்மால் முடிந்ததைச் செய்தும் தோல்வியடைந்தோம்.

கடந்த டிசம்பர் வரை தொழில் வங்கி மூலமே ஆட்கள் திரட்டப்படல் வேண்டும் என எம் மீது ஒருவிதி திணிக்கப்பட்டது. ஆனால் திரட்டப்பட்டோரில் பாதிப்பேர் ஒன்றில் வேலையற்றோராக அல்லது எழுதவோ அல்லது தட்டெழுத்து அடிக்கவோ இயலாதவர்களாய் விண்ணப்பித்த பதவிகளுக்கு தகுதியற்றவர்களாகவும இருந்தனர். அவர்களில் சிலர் எம். பீ.களிடமிருந்து கடிதங்களைக் கொண்டு வந்திருந்தனர். அக்கடிதங்கள் குப்பைக் கூடையில் இடம்தேடிக்கொண்டன.

நிலைமை மோசமாகிய சமயத்தில் அதற்கு ஒருமுடிவு கட்டப்படல் வேண்டும் என நான் அரசாங்கத்துக்குக் கூறி நீதிச் சேவை ஆணைக்குழு தொழில் வங்கிக்கு வெளியே ஆள்திரட்ட அனுமதிக்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தேன்.

சுமார் 10,500 விண்ணப்பங்கள் கிடைத்ததில் 322 பட்டதாரிகளிடம் இருந்து வந்தவை. சிங்கள சுருக்கெழுத்தாளர்கள் பதவிகளுக்கு 1,800 பேர் விண்ணப்பித்தனர். ஒரு மாதத்தில் நான் காலியிடங்களை நிரப்ப முடிந்தது.

இருந்தும் 12 தமிழ் மற்றும் 5 ஆங்கில சுருக்கெழுத்தாளர்களுக்கு காலியிடங்கள் உள்ளன, இன்னமும் ஏன் காலியிடங்கள் உள்ளன எனக்கேட்கலாம். அரசாங்க சேவையில் உங்களுக்கு சரிவர சம்பளம் கிடைக்காது.

ஒரு எழுதுவினைஞருக்கு மாதாந்தம் ரூபா 640 உடன் மேலதிக அலவன்ஸாக ரூபா 240 மட்டும் கொடுக்க திறைசேரி அனுமதிக்கிறது. இந்த எழுதுவினைஞர்கள் பியோன்களாக வங்கிகளுக்குப் போகிறார்கள். அங்கு ஒரு பியோன் மாதம் ரூபா 1,500 சம்பளத்துடன் வருடத்துக்கு ஒரு போனஸ், வைத்தியம் மற்றும் நலன்களையும் பெறுகிறார்கள். அரசாங்கத்தில் அவர்கள் பென்ஷன் பெற 10 முதல் 15 வருடம் காத்திருக்கவேண்டும். பென்ஷன் கிடைக்கும் போது பணம் அதன் பெறுமதியை இழந்துவிடுகிறது.

வாழ்க்கைச்செலவு ஏறிக்கொண்டே போகிறது. நான் அட்டோபரில் அவுஸ்திரேலியா போகும்போது தேங்காய் ஒன்றின் விலை ஒரு ரூபா 25 சதம். ஜனவரியில் நான் திரும்பிவந்தபோது அதன் விலை ரூபா ஆறு. பாண் 1977

## நாட்டின் உண்மை நிலையை விளக்கி

## பிரதம நீதியரசர் நெவில் சமரக்கோன்

## கொழும்பில் பேசிய பேச்சு

இல் ஒரு றாத்தல் 60 சதம் இப்போது 3 ரூபா 25 சதம் ஒரு கொத்து 2 ரூபா ஆகவிருந்த அரிசி 8 ரூபா அல்லது 9 ரூபா ஆகிவிட்டது. இவ் விபரங்களை நான் எனது சுருக்கெழுத்தாளர்கள், எழுதுவினைஞர்களிடமிருந்து பெற்றேன். சில அரசாங்க ஊழியர்கள் ஏன் லஞ்சம் வாங்குகிறார்கள் என நான் அறியவிரும்பினேன். தங்கள் சம்பளத்தில் அவர்கள் வாழமுடியாதென நான் கண்டறிந்தேன்.

கொழும்பில் வாழமுடியாத நிலையில் பல சிற்றூழியர்களும் சிரேஷ்ட அதிகாரிகளும்கூட வெளியிடங்களில் இருந்து அதிகாலையில் எழுந்து பயணஞ்செய்து இரவில் வீடு திரும்புகின்றனர். நாளாந்தம் வாழ்க்கைச் செலவு வெறுமனே ஏறிச் செல்லவில்லை, தனது ஓட்டியை வீசியெறிந்துவிட்டு ஓடும் பந்தயக் குதிரை போல அதிவேகமாக அது ஓடுகிறது. அத்தகைய குதிரை வெற்றியடைவதில்லை. ஏனெனில் அது கட்டுப்பாட்டை மீறி ஓடுவதே காரணம்.

இன்று செல்வந்தர்களும் எம். பீ.க்களும் தான் நன்றாக வாழமுடியும். 1930களில் ஏற்பட்ட மந்தநிலை நினைவுக்கு வருகிறது. இன்று அது பணவீக்கம் எனக் கூறப்படுகிறது. இவை சில அரசியல்வாதிகளால் மக்களை ஏமாற்றப் பயன்படுத்தப்படும் வார்த்தைகளே. சிலர் அதிர்ஷ்டசாலிகள் அவர்களுக்கு உயர்ந்த சம்பளம், இலவச கார், இலவச சாரதியும், பெற்றோலும் கிடைக்கின்றன.

ஜனாதிபதி தனது சம்பளம் ஒருபிச்சைக்காரனின் சம்பளம் எனக்கூறியதாக பத்திரிகை ஒன்றில் படித்தேன். அவர் தெரிவுசெய்யப்பட்ட மக்கள் பிரதிநிதி. அவருக்கு கார்கள் வசிப்பிடங்கள் போன்ற பிறவும் உண்டு. அவருக்கு கண்டியிலும் நுவரேலியாவிலும் மாளிகைகள் உண்டு. அப்படியாயின் ஒரு பிச்சைக்காரனின் சம்பளத்தில் அவரை வைத்திருக்க நாட்டுக்கு பெருமளவு பணம் செலவாகிறது.

அரசாங்க துறையிலோ, தனியார் துறையிலோ நீங்கள் எங்கிருந்தாலும் இப்போது வாழ்வது மிகக் கடினம் என்பதை நான் அறிவேன்.

எனவே அவர்கள் நேர்மையற்றவர்களாகின்றனர். அவர்களை நான் குற்றஞ் சொல்லமுடியாது. நான் ஒரு வழக்கறிஞராக இருந்தபோது பேசுவதற்காக பயிற்சி தரப்பட்டேன். அதிகளவு நான் பேசப் பேச எனக்கு அதிகளவு சம்பளம் கிடைத்தது. ஆனால் இப்போது எனது வாயை மூடிக்கொண்டிருக்கவே சம்பளம் கொடுக்கப்படுகிறது. ஆனால் நாம் பேசவேண்டிய நிர்ப்பந்தம் ஏற்படும் சந்தர்ப்பங்களும் உண்டு. ஏனெனில் இவை நீதிபதிகளையும் பாதிக்கும் விஷயங்களாகும்.

# வெள்ளம் வற்றிவிட்டது

# விவசாயிகளின் கண்ணீர்

2-ம் பக்கத் தொடர்

கள் கண்ணீர் வடிக்கின்றனர். எம். ஜீ. ஆரோ சாமிக்கு ஏன் இந்த வேலை என்று கையை விரிக்கிறார்.

தமிழக மக்கள் இத்தகையவர்களின் தலைமையைப் பெற என்ன பாவம் பழி செய்தார்களோ தெரியவில்லை என்றே சாதாரண தமிழ் மக்கள் நினைக்கிறார்கள்.

**கடிதம்**

## வட்டக்கச்சி-இராமநாதபுரம் மக்களின் அவலமும்

## அதிகாரிகளின் கெடுபிடியும்

கள் கண்ணீர் வடிக்கின்றனர். எம். ஜீ. ஆரோ சாமிக்கு ஏன் இந்த வேலை என்று கையை விரிக்கிறார்.

யவர்களின் தலைமையைப் பெற என்ன பாவம்பழி செய்தார்களோ தெரியவில்லை என்றே சாதாரண தமிழ் மக்கள் நினைக்கிறார்கள்.

# வெள்ளம் வற்றிவிட்டது விவசாயிகளின் கண்ணீர் வற்றவில்லை!

காலம் தவறிப் பெய்த பெருமழை நின்று விட்டது. வீடுகளையும் விவசாய உற்பத்திகளையும் அடித்துச் சென்ற பெருவெள்ளமும் வற்றிவிட்டது. ஆனால் மழையும்—வெள்ளமும் ஏற்படுத்திய அழிவுகளால் திசை தெரியாது தவிக்கும் விவசாய மக்களின் கண்ணீர் மட்டும் தொடர்ந்து பெருகிக் கொண்டே இருக்கிறது. உணவை உற்பத்தி செய்யும் உயர்ந்த அந்த மக்கள் ஒருவேளை உணவிற்கே கஷ்டப் படுகிறார்கள். அவர்கள் படும் வேதனையையும் துயரத்தையும் கிளிநொச்சி போன்ற விவசாயப் பிரதேசங்களுக்குச் சென்றால் அதிகம் அவதானிக்க முடியும்.

கிளிநொச்சி போன்ற விவசாயப் பிரதேசங்கள் பல வழிகளிலும் பின்தங்கிய பகுதிகளாக மட்டுமன்றி முற்றிலும் விவசாய உற்பத்திகளையேதான் நம்பி வாழும் பிரதேசங்களாகவுமே உள்ளது. ஓரளவுக்கு வசதி படைத்த பணக்கார விவசாயிகளை தவிர்த்துப்பார்த்தாலும் சிறு உடமை விவசாயிகள், குத்தகை விவசாயிகள், கூலி விவசாயிகள், குடியேற்றத்திட்ட விவசாயிகள் என்போரே ஏகப் பெரும்பான்மையினர். இவர்கள் எல்லோரும் அறுவடை காலத்தை எதிர்பார்த்தே வாழ்க்கையின் அன்றாடத் தேவைகளை கவனித்து வருபவர்கள். கடனும், கைமாற்றும், வட்டியுமாகவே வாழ்க்கையை நடத்தும் விவசாயிகள் வாழ்வை வெள்ளம் நிலை குலையச் செய்துவிட்டது.

வெள்ள அழிவுக்கு மேல் எஞ்சியுள்ள வற்றையாவது ஒழுங்கு படுத்தி சந்தைப் படுத்த முடியாத நிலையிலும் அவர்கள் உள்ளனர். போக்குவரத்து முற்றாகச் சீர்குலைந்து விட்டது. வாழைக்குலை, தேங்காய், மாங்காய், பூ, பிஞ்சு போன்ற வற்றையாவது விற்று வாழ்க்கையைக்கொண்டிழுக்க முயன்றால் போக்குவரத்துக்கான பாதைகள், மதகுகள், பாலங்கள் உடைந்து சீரழிந்த நிலையில் உள்ளன.

எல்லோரிலும் பார்க்க கூலி விவசாயிகளான இந்திய வம்சாவழி மக்களது நிலை மிகப் பரிதாபகரமானதாகும். அவர்களுக்கு ஏற்கனவே இருப்பதற்கு மட்டுமே சிறு அளவு நிலம் உண்டு. இந்நிலமும் எல்லோருக்கும் இல்லை. வருடம் முழுவதும் கூலி உழைப்பையே நம்பி வாழ்பவர்கள். அவர்களுக்கு அரசாங்க உதவிகளும் எட்டாக் கொம்பாகவே உள்ளது. பசி, பட்டினியும், அதனால் நோய்களும் அவர்கள் மத்தியில் அதிகரித்து வருகின்றன. வளமான வாழ்வு தேடி வடக்கே வந்த இந்திய வம்சாவழி மக்களின் நிலை சொல்லும் வகையில் இல்லை. இந்நேரம் பார்த்து கொள்ளைலாபம் அடிக்கும் வியாபாரிகளும், வர்த்தகர்களும் விவசாய மக்களைக் கொல்லாமல் கொன்று வருகிறார்கள்.

கிளிநொச்சி தனிமாவட்டமானதும் விவசாய மக்களுக்கு ஏற்பட்ட மகிழ்ச்சி சில கணப்பொழுதில் மறைந்துவிட்டது. அது வெறும் பெயருக்குத்தான் என்றே விவசாயிகளிடம் பேச்சு வருகிறது. அற்ப சொற்ப நிவாரணம் கூட உரியவர்களுக்கு ஒழுங்காகக் கிடைக்கவில்லை என்றே மக்கள் கூறுகிறார்கள்.

எனவே அரசாங்கமும் அரச அதிகாரிகளும் வேதனையில் மூழ்கி இருக்கும் விவசாயிகளின் துயர் துடைக்க உரிய நடவடிக்கைகளை தாமதியாது செய்ய வேண்டும். அவர்களது அடுத்த உற்பத்தி முயற்சிகளுக்கு சீரான முதலீட்டு உதவிகளை திட்டமிட்டு கொடுத்துதவ வேண்டும். இதுவிவசாயிகளுக்கு செய்யும் உதவிமட்டுமல்ல. நாட்டின் உற்பத்தி அதிகரிப்புக்கும் உதவக்கூடியதாகும்.

பெருமுதலாளிகளையும், வர்த்தகப் பெருமுதலைகளையும் பேணிப்பாதுகாத்துவரும் அரசுக்கு ஏழை விவசாயிகளின் குரல் எப்படி எட்டப் போகிறது? அப்படி எட்டச் செய்வதற்கு தனித்தனியே செயல்பட்டுப் பிரயோசனம் ஏற்படாது. விவசாயிகள் ஒரு அமைப்பாகத் தம்மை மாற்றிக் கொண்டு செயல்படுவது அவசியமாகும். அது நடைமுறைக்கு வராதவரை விவசாயிகள் பரவலான பிரச்சனைகளை அரசு தானாக உணர்ந்து தீர்த்து வைக்கும் என எவரும் எதிர்பார்க்கமுடியாது.

**கடிதம்**

# வட்டக்கச்சி-இராமநாதபுரம் மக்களின் அவலமும் அதிகாரிகளின் கெடுபிடியும்

இம்முறை ஏற்பட்ட கடும் வெள்ளப் பெருக்கால் கிளிநொச்சி மாவட்டத்திலேயே கடுமையாகப் பாதிப்பு ஏற்பட்ட பிரதேசமெனில் இப்பகுதியேயாகும். ஒருபுறம் மழை வெள்ளமும் மறுபுறம் இரணைமடுக் குளத்துக்குவரும் மேலதிக கழிவு நீராலும் வெள்ளக்காடாகவே இப்பிரதேசம் காட்சி அளித்தது. முற்று முழுதாக விவசாயப்பிரதேசமாகிய இக்கிராமங்களில் இன்று ஒரு வயிற்றுக் கஞ்சிக்கே வக்கில்லாது இங்குள்ள மக்கள் திண்டாடுகிறார்கள். அறுவடையில் பத்து வீதமேனும் தேறும் என்பதே சந்தேகமாக உள்ளது.

வீடுவாசலை இழந்தவர்கள்—பொருள் பண்டங்களை இழந்தவர்கள்—ஆடுமாடுகளை இழந்தவர்கள் பயிர்வகைகளை இழந்தவர்கள் இப்படி ஏதாவது ஒன்றையோ அல்லது எல்லாவற்றையுமே இழந்தவர்களாகவே இங்குள்ள மக்கள் இருக்கின்றார்கள்.

இப்பகுதியில் ஏறத்தாள பன்னிரெண்டாயிரம் மக்களுக்குமேல் வாழ்கின்றனர். இவர்கள் தமது அன்றாட தேவைகளுக்கு கிளிநொச்சி நகருக்கே செல்ல வேண்டியவர்களாக உள்ளார்கள் ஆனால் பனங்கண்டி பிரதான பாதையில் நான்கு இடங்களில் உடைப்பு ஏற்பட்டு பாதைகள் யாவும் துண்டிக்கப்பட்ட நிலையில் உள்ளது. உடைவு ஏற்பட்டு பத்துத்தினங்களுக்கு மேலாகியும் இப்பாதை திருத்துவது சம்பந்தமாக இதுவரையும் எதுவித ஆக்கபூர்வமான வேலைகளும் மேற்கொள்ளப்படவில்லை. இது மிகவும் கவலைக்குரிய இடமாகும்.

யாழ்ப்பாணத்துடன் இணைந்திருந்த காலத்தில் இப்படியொரு அவலநிலை ஏற்பட்டவுடன் அங்கிருந்து மேலதிகாரிகள் விரைந்துவந்தகாலம் ஒன்று இருந்தது ஆனால் கிளிநொச்சி தனிமாவட்டமாகியும் இங்குள்ள மேலதிகாரிகளோ ஏனையோரோ இதுவரையும் இக்கிராமங்களில் என்ன நடந்திருக்கு என்பதை அறியாமலே இருக்கின்றார்கள். இங்குள்ள மக்களின் அவலநிலையை—அவர்களின் வயிற்றுக் கொடுமையைத் தன்னும் உணராமல் காற்றாடிக்குக் கீழ் இருந்து வெள்ளைத்தாள்களில் கணக்குப்போட்டுத் தமது மேல் அதிகாரிகளுக்கு கணக்குக் காட்டுகிறார்கள்.

இப்பகுதிகளில் உள்ள இரண்டு கிராமசேவையாளர்களையும் தவிர வேறு எவ்வதிகாரிகளையும் போய்கூடச் சந்திக்கமுடியாமல் மக்கள் கஷ்டத்துக்கு மேல் கஷ்டத்தை அனுபவிக்கின்றார்கள். இக்கஷ்டத்தை பொறுக்காத இங்குள்ள சில நல்ல உள்ளங்கள் வெள்ளத்தில் இரண்டுமுறை தாண்டு எழுந்து அரசாங்க அதிபரைச் சந்தித்து 850 பேருக்கு உடனடி உணவுப் பொருட்கள் நிவாரணம் வழங்க வேண்டும் என்ற கோரிக்கைக்கு சம்மதம் அளித்தும் ஆசாரி இடம் கொடுத்தாலும் பூசாரி இடங்கொடுக்காத கதையாக அமைந்துள்ளது விந்தையிலும் விந்தையான செயலாகும்.

—வட்டக்கச்சி விவசாயி

அச்சுப்பதிவு: யாழ்ப்பாணம் அச்சகம் 407 ஸ்ரான்லி வீதி யாழ்ப்பாணம் வெளியீடு சி. நவரத்தினம் 15/1 மின்சாரநிலைய வீதி யாழ்ப்பாணம்